பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 203

புதன்கிழமை
18 ஜூன் 2025

ஆனி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

எரிபொருள் விநியோகத் தாமதத்தைத் தவிர்க்க

# காங்கேசன் களஞ்சியத்திலிருந்தே இனி யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள்

எரிபொருள் வரிசைகளுக்கு முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான எரிபொருள் விநியோகத்தில் உள்ள தாமதங்களைத் தவிர்ப்பதற்காக, காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சியத்திலிருந்தே யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்புநிலையங்களுக்கு இனிவரும் நாள்களில் எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 14

## உணவருந்திய இளைஞர் மயங்கிச் சாவு!

யாழ்., ஜூன் 18
உணவருந்திய இளைஞர் ஒருவர் திடீரென மயங்கிவீழ்ந்த நிலையில் உயிரிழந்துள் 15

## இரத்தவாந்தியெடுத்த வயோதிபர் உயிரிழப்பு

யாழ்., ஜூன் 18
இரத்தவாந்தியெடுத்த முதியவர் ஒருவர் மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். 15

## ரயிலில் பாய்ந்து இளைஞர் சாவு!

யாழ்., ஜூன் 18
யாழ்ப்பாணம் - புங்கன்குளம் பகுதியில், ரயிலுக்குமுன்பாகப்பாய்ந்து இளைஞர் ஒருவர் உயிரை மாய்த்துள் 15

## கரவெட்டியில் கறுப்பாடு!

யாழ்., ஜூன் 18
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையில் (கரவெட்டி) நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சி 15

வடக்கு மாகாணத்தில்

## எரிபொருள் நிலையங்களில் நேற்றும் தொடர்ந்தது வரிசை!

யாழ்ப்பாணம், ஜூன் 18
வடக்கு மாகாணத்தில் உள்ள பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றும் நீண்ட வரிசைகள் இருந்ததை அவதானிக்கமுடிந்தது.
இஸ்ரேல் - ஈரான் போர் காரணமாக, எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் 15

## ஈ.பி.டி.பி.யுடன் இணைந்து ஆட்சியமைக்கமாட்டோம்

தமிழரசின் தீவகக்கிளை போர்க்கொடி
பதில் தலைவருக்குக் கடிதம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்.18
தீவகத்தில் தமிழரசுக் கட்சி முன்னிலை பெற்றுள்ள வேலணை, நெடுந்தீவு பிரதேசசபையிலும், மற்றும் ஊர்காவற்றுறையிலும் ஈ.பி.டி.பி.யின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைக்கக் கூடாது என்று வலியுறுத்தி ஊர்காவற்றுறை தொகுதிக்கிளை தமிழரசுக் கட்சியின் பதில் தலை 14

## கொள்கைக்கு முரணாக செயற்பட்ட திசைகாட்டி!

யாழ்ப்பாணம், ஜூன் 18
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் அமர்வுகள் நேற்று நடைபெற்றன.
இதன்போது, 15

## பருத்தித்துறை நகரசபையில் தமிழ்த் தேசியப் பேரவை ஆட்சி



யாழ்ப்பாணம், ஜூன் 18
பருத்தித்துறை நகரசபையின் முதலாவது அமர்வு, உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில், நேற்றுக் காலை 16

## பரு. பிரதேசசபையில் தமிழரசின் ஆட்சி!



யாழ்ப்பாணம், ஜூன் 18
பருத்தித்துறை பிரதேசசபையின் முதலாவது அமர்வு உள்ளூராட்சி ஆணையாளரின் முன்னிலையில் நேற்றுக் காலை 11.30 15



பூச்சந்தி பூராணி

'வீட்டில பெற்றோல் கிணறு இருந்தாலும் கூட லைனில நிண்டு வாங்கிறவை தான் உண்மையான யாழ்ப்பாணீஸ் கண்டியளோ'

## வல்வெட்டித்துறையில் பேரவையின் ஆட்சி?

யாழ்ப்பாணம், ஜூன் 18
வல்வெட்டித்துறை நகரசபையில் தமிழ்த் தேசியப் பேரவை இன்று ஆட்சியமைக்கும் என்று தெரியவருகின்றது. 15

## வலி. வடக்கும் வீட்டின் வசம்?

யாழ்., ஜூன் 18
வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கும் சாத்தியங் 15

## செம்மணிப் புதைகுழி விவகாரம் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்!

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அழுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 18
செம்மணிப் புதைகுழி விடயத்தில் நீதி நிலைநாட்டப்படுவதுடன், புதைகுழிகளின் நீட்சி அறியப்பட வேண்டும். எந்தவொரு காரணத்தை முன்னிறுத்தியும் புதைகுழி அகழ்வுகள் இடைநிறுத்தப்படக் கூடாது - இவ்வாறு யாழ்ப் 15

கரவெட்டிப் பிரதேசசபையில்

## கடைசிவரை பரபரப்பு நிலை இறுதியில் தமிழரசு வெற்றி!



யாழ்ப்பாணம், ஜூன் 18
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் (கரவெட்டி) முதலாவது அமர்வில், ஆட்சியமைக்கும் தரப்பைத் தீர்மானிக்க இரகசிய வாக்கெடுப்பு 15

## வலி. கிழக்கு பிரதேசசபையில் தமிழரசின் ஆட்சிக்கு வாய்ப்பு?

யாழ்ப்பாணம், ஜூன் 18
வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் முதலாவது அமர்வு இன்று நடைபெறவுள்ள நிலையில், இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆட்சி மலரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் இன்று காலை 11.30 மணிக்கு இந்த 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 17.06.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 4105
ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கங்கள்: 18 27 37 55
விசேட எழுத்து: H

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி: 17.06.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1172
வெற்றி இலக்கினம்: விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 12 33 43 58

**NLB ஜய**
திகதி: 17.06.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0131
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 5 9 1 2

**மெகா பவர்**
திகதி: 17.06.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2211
ஆங்கில எழுத்து: G
சுப்பர் இலக்கம்: 18
வெற்றி இலக்கங்கள்: 32 42 53 65

**மஹஜன சம்பத**
திகதி: 17.06.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 5863
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 8 0 4 2 7 1

**தன நிதானய**
திகதி: 17.06.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1893
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 68 71 78 81
விசேட எழுத்து: W

**அத சம்பத**
திகதி: 17.06.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0438
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 4 2 7 1

# சர்வதேச வர்த்தகப் போரால் இலங்கைக்குப் பெரும் பாதிப்பு

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 18

**சர்வதேச வர்த்தகப் போர் காரணமாக இலங்கையின் ஏற்றுமதித் தொழிற்றுறை பெரும் பாதிப்பை எதிர்கொள்ளும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் வோல்க்கெர் டேர்க் சுட்டிக் காட்டியுள்ளார்.**

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 59ஆவது அமர்வின் ஆரம்ப உரையிலேயே அவர் இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்காவின் அண்மைய வரிகள் தொடர்பாகவே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ள மனித உரிமைகள் ஆணையாளர், வர்த்தகப் போரின் அதிர்ச்சிகள் மூன்றாம் உலக நாடுகளை சுனாமியின் வலுவோடு தாக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

கரீபியன் நாடுகள், அபிவிருத்தி அடைந்துவரும் சிறிய தீவு நாடுகள் ஆகியவை மோசமான பாதிப்பை எதிர்கொள்ளும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், இலங்கை, பங்களாதேஷ், கம்போடியா, வியட்நாம் போன்ற ஏற்றுமதி தொழிற்றுறையை அடிப்படையாகக் கொண்ட நாடுகள் பெரும் பேரழிவுப் பாதிப்புகளை எதிர் கொள்ளும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி: 17.06.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 0571
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கம்: 1 3 9 0 5 2

**Super Ball** DLB
திகதி: 17.06.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2837
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கம்: 03 18 25 47

**சனிதா** DLB
திகதி: 17.06.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து: O
வெற்றி இலக்கம்: 07 20 59 74
வெற்றி வாரம்: 4998

**SASIRI** DLB
திகதி: 17.06.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 0706
வெற்றி இலக்கம்: 24 31 38

**லக்ன ராசி** DLB
திகதி: 17.06.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
கும்பம்
வெற்றி இலக்கம்: 11 29 30 62
சீட்டிழுப்பு வாரம்: 4549

**KAPRUKA** DLB
திகதி: 17.06.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து: L
சுப்பர் இலக்கம்: 03
வெற்றி இலக்கம்: 49 55 56 75
வெற்றி வாரம்: 2013

**அத கோடிபதி** DLB
திகதி: 17.06.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கம்: 01 07 15 58
வெற்றி வாரம்: 2663

# ராஜபக்சக்களை விடவும் பிரபாகரன் மேலானவர்!

## சரத் பொன்சேகா காட்டம்

கொழும்பு, ஜூன் 18



போர் நடைபெற்றபோது பிரபாகரன்கூட எமது குடும்ப உறுப்பினர்களை இலக்குவைக்கவில்லை. ஆனால் ராஜபக்சக்கள் எமது குடும்ப உறுப்பினர்களைக்கூட விட்டுவைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இராணுவத்தை வைத்து மஹிந்த ராஜபக்ச அன்று அரசியல் நடத்தினார். இன்று அவரது மகன் நாமல் ராஜபக்ச அதைச் செய்யமுற்படுகின்றார். ஜனாதிபதி இராணுவத்தினரைச் சிப்பாய் என்று கூறிவிட்டார் என்று கூறிச் சிலர் கொதித்தெழுந்துள்ளனர். இராணுவத்தினரைச் சிப்பாய் என்று விளிப்பதில் எந்தத் தவறும் கிடையாது.

போர் முடிந்த பின்னர் என்னை இரண்டரை வருடங்கள் சிறையில் அடைத்தனர். எனக்குக் கீழ் வேலைசெய்த 35 பேரை ஓய்வூதியம் இன்றி வீட்டுக்கு அனுப்பினார்கள். தனியார் நிறுவனங்களில் அவர்களுக்கு வேலை கிடைப்பதையும் ராஜபக்சக்கள் தடுத்தனர்.

சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்தது தவறு என நாமல் ராஜபக்ச இன்று கூறுகின்றார். ஆனால் அவரது தந்தை, சித்தப்பா போன்றவர்கள்தான் என்னைச் சிறையில் அடைத்தனர்.

புலிகளுடன் நாம் நேருக்கு நேர் போரிட்டோம். ஆனால் எமது குடும்பத்தார்மீது பிரபாகரன் தாக்குதல் நடத்தவில்லை, பழிவாங்கவில்லை. ஆனால் ராஜபக்சக்கள் அதையும் செய்தனர். எனது மகள்மார் வெளிநாட்டில் இருந்துவரும் போது விமானநிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். எனது மருமகனை கைதுசெய்வதற்கு முற்பட்டனர். ஆனால் அதைச் செய்யமுடியாமற்போனது -என்றார். (எ-44)

# சுதந்திரக்கட்சி மீண்டும் சந்திரிகா வசமாகிறது

கொழும்பு, ஜூன் 18

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் மீண்டும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது.

மீண்டும் கட்சியைப் பொறுப்பேற்று கட்டியெழுப்புமாறு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராக, சிறிசேன பதவிவகித்த காலத்தில், அதனை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்குகளைத் திரும்பப்பெற சந்திரிகா உடன்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# எரிபொருளைப் பெற வவுனியாவிலும் வரிசை

வவுனியா, ஜூன் 18

வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்புநிலையங்களிலும் எரிபொருளுக்காக மக்கள் நீண்டவரிசையில் நேற்று காத்திருந்தனர்.

வவுனியாவின் நகரம் மற்றும் அதன் புறநகர்ப்பகுதிகளில் உள்ள பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் நிரப்புநிலையங்களிலேயே இந்த நீண்ட வரிசை காணப்பட்டது. (ச-110)

# மிகப் பெரிய லொத்தர் பரிசு

கொழும்பு, ஜூன் 18

இலங்கை வரலாற்றில் மிகப் பெரிய லொத்தர் பரிசை ஒருவர் வென்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தேசிய லொத்தர் சபையின் மெகா பவர் 2210ஆவது சீட்டிழுப்பாகும். அதில் ரூ.474,599,422 (47 கோடி) சூப்பர் பரிசு வெல்லப்பட்டுள்ளது.

இந்த லொத்தர் கோகரெல்லப் பகுதியைச் சேர்ந்த லொத்தர் முகவரான எச்.ஏ.ஜானகி ஹேமமாலாவால் விற்கப்பட்டுள்ளது. முன்னதாக, இலங்கையில் மிகப் பெரிய லொத்தர் பரிசாக ரூ.230 மில்லியன் பரிசு வழங்கப்பட்டது. லொத்தர் வெற்றியாளர் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்டங்களை முடிவுறுத்த 188.435 மில்லியன் ரூபா தேவை

## சங்கானைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூன் 18**

**சங்கானைப் பிரதேசத்தில் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட வீட்டுத்திருத்தத்திட்டங்கள்மற்றும்வீட்டுத்திட்டங்களை முடிவுறுத்த 188.435 மில்லியன் ரூபா தேவை என்று சங்கானைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.**

அண்மையில் நடைபெற்ற சங்கானைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத்திட்டங்களின் கொடுப்பனவுகள் நீண்டகாலமாக வழங்கப்படவில்லை. அதனால் வீட்டுத்திட்டப் பயனாளிகள் பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். மிகுதிக் கொடுப்பனவுகளை வழங்கினாலே அவர்கள் தங்கள் வீடுகளில் வாழ முடியும். 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுத்திருத்தத்திட்டத்தில் 47 வீடுகளுக்கும், 3 இலட்சம் ரூபா பெறுமதியான திட்டத்தின் கீழ் 74 வீடுகளுக்கும் என மொத்தமாக 121 வீடுகளுக்கு 20.275 மில்லியன் ரூபா வழங்கப்படவேண்டும். 2018 ஆம் ஆண்டு 5 லட்சம் ரூபா வீட்டுத் திட்டத்தின் கீழ் 790 வீடுகளுக்கு நிதி விடுவிக்கப்பட்ட நிலையில் 79.64 மில்லியன் ரூபா வழங்கப்படவேண்டியுள்ளது. 2019 ஆம் ஆண்டு 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீட்டுத்திட்டத்தின் கீழ் 138 வீடுகளுக்கு நிதி விடுவிக்கப்பட்ட நிலையில், 88.52 மில்லியன் ரூபா இன்னமும் வழங்க வேண்டியுள்ளது. இந்த இரு வீட்டுத்திட்டங்களின் கீழ் 928 வீடுகளுக்கு 168.16 மில்லியன் ரூபா வழங்கவேண்டியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-125)

**இந்தவருடத்தில்**

## டெங்கு பாதித்த 50 பேருக்கு யாழ்.போதனாவில் சிகிச்சை!

யாழ்ப்பாணம், ஜூன் 18

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 50 பேர் டெங்குப் பாதிப்புக்குள்ளான நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடுதிரும்பியுள்ளனர். யாழ். போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். (ச-125)

## இந்தியத்துணைத் தூதுவருடன் யாழ்.மாநகர முதல்வர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணத்தின் இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி, யாழ்ப்பாண மாநகரசபையின் புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி மதிவதானி விவேகானந்தராஜாவை சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது இந்திய அரசு ஆதரவு வழங்கும் திட்டங்கள், யாழ்ப்பாணம் மற்றும் வட மாகாணத்தில் இந்தத் திட்டங்களின் முன்னேற்றத்துக்கு எவ்வாறு இணைந்து செயற்பலாம் என்பதை இரு தரப்பினரும் விவாதித்தனர். யாழ்ப்பாணத்தில் செயற்படுத்தவிருக்கும் எதிர்கால திட்டங்களை மேயர் பகிர்ந்தார். இதனை வரவேற்ற துணைத் தூதுவர் யாழ்ப்பாண மக்களின் நலனுக்கும் வளர்ச்சிக்கும் இந்தியா தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என்று குறிப்பிட்டார். (ச-125)

## காடழிப்பில் ஈடுபட்ட மூவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஜூன் 18

காடழிப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பூநகரி மற்றும் யாழ். மாவட்ட வனவளத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்ட மூவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பூநகரி மண்டைக்கல்லாறு ஒதுக்ககாட்டில் ஜே.சி.பி. ரக வாகனம்மூலம் காடுகள் அழிப்பதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த அதிகாரிகள் அங்கு காடழிப்பில் ஈடுபட்ட மூன்று ஜே.சி.பி. இயந்திரங்களையும் அதன் உரிமையாளர்களையும் கைது செய்தனர்.


சந்தேகநபர்ளுக்கெதிராக வழக்குப் பதிவுசெய்து கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் கடுமையாக எச்சரிக்கை விடுத்து பிணையில் செல்ல அனுமதிவழங்கப்பட்டது. (ச-125)



## கொழும்பு மாநகர முதல்வர் ஊடகவியலாளரே

கொழும்பு,ஜூன் 18

கொழும்பு மாநகர முதல்வராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள விராய் கலி பல்தசார், ஓர் ஊடகவியலாளரும்,ஆய்வாளரும்,சமூக செயற்பாட்டாளருமாவார். பால்நிலை சமத்துவக் கற்கை நெறியில் கலாநிதிப் பட்டம் பெற்ற இவர், தொலைக்காட்சி ஒன்றின் காலை நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணிபுரிந்துள்ளார். 2021 ஆம் ஆண்டு அரசியலில் கால்பதித்த அவர் 2024 ஆம் ஆண்டுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-[illegible])




## அம்பெல்லாம் செம்பாகும்

அடிக்கிற கைதான் அணைக்கும் எண்டுவினம். சிலர் அப்பிடி வேணுமெண்டே அடிச்சுப்போட்டு, பிறகு தாங்களே அவைக்கு ஆறுதல் சொல்லுறமாதிரிப்போய் தங்கட கன்னைக்கு அவையை இழுக்கிற வித்தையைக் காட்டத் தொடங்கியிருக்கினம். எங்கை உந்த வேலை நடக்குதெண்டு கடுமையா மண்டையைப் போட்டுக் குழப்பத் தேவையில்லை, எல்லாம் உந்த வீட்டுக்கட்சியில நடக்கிற கூத்துத்தான். அந்தக் கட்சியில மத்திய குழுவின்ர சொல்வழி கேளாமல் குழப்படி செய்யினமெண்டு கொஞ்சப்பேரை ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து உறுப்புரிமையில இருந்து நிப்பாட்டினவையெல்லோ. உண்மையில அவையள் கட்சியின்ர தலைவர் தெரிவில தங்களுக்கு சப்போர்ட்டா இருக்கேலை எண்டவையைத்தான் இப்பிடி வேற நொண்டிச் சாட்டுகளை வைச்சு, கட்சியை விட்டே தூக்கினவை. அவையைத் தூக்கிறதில மூளையா இருந்தவர் கட்சியின் மேல்மட்டத்தில இப்ப 'பதிலாளியா' இருக்கிற ஒருத்தர்தான்.

இப்ப என்னடாவெண்டால், அவையைக் கட்சியை விட்டுத் தூக்கோணும் எண்டு ஆர் முன்னுக்கு நிண்டாரோ அந்தப் 'பதிலாளி', கட்சியை விட்டு நிப்பாட்டுப்பட்டவையைத் திரும்ப உள்ளுக்க கொண்டுவாறதுக்கு பின்கதவால பேரம்பேசத் தொடங்கியிருக்கிறாராம். முல்லைத்தீவில பண்டாரவன்னியனுக்கும், மகாத்மா காந்திக்கும் சிலைவைச்சே அவையைக் கேவலப்படுத்தின 'சிலைமோகனும்' இப்பிடிக் கட்சியைவிட்டுத் துரத்துப்பட்டவையில ஒராள். தன்னைக் கட்சியை விட்டு நிப்பாட்ட மத்தியகுழுவுக்கு அதிகாரமில்லை எண்டு உடனேயே சிலைமோகன் வழக்கும் போட்டவர். தனக்குப் பார்லிமெர்ண்ட் எலக்சனில சீற் தரேலை எண்டுதான், சிலைமோகன் கட்சியின்ர பதிலாளியளோட பகைச்சுக்கொண்டு, குழப்படிகாரரா மாறினவர். அதுக்குமுதல் அவரும் இப்ப பதிலாளியா இருக்கிறவையின்ர பக்கம்தான் நிண்டவர். முந்தித் தங்களோட ஒண்டா இருந்த பழக்கதோசத்தில சிலைமோகனுக்கு எங்க தட்டினால் எப்பிடி வழிக்கு வருவார் எண்டது 'பதிலாளிக்கு' நல்லாத் தெரியும். அதால சிலைமோகன் வீட்டுக்கே போய், அவரோட 'டீல்' பேசுப்பட்டிருக்காம். கட்சியை விட்டால் தனக்கும் வேற கதி இல்லையெண்டதால சிலைமோகனும் பதிலாளி வைச்ச டீலுக்கு ஓமெண்டு தலையாட்டி இருக்கிறாராம். 'என்னைக் கட்சியை விட்டு நிப்பாட்டினது பிழை' எண்டு போட்ட வழக்கை வாபஸ் வாங்கிற முடிவை சிலைமோகன் எடுத்திட்டார். அதுக்கு உந்த 'டீல்' தான் காரணம்.

கட்சியின்ர சொல்லுக்குக் கட்டுப்படாமல் தனிவழியில 'பிரகாசிக்க' வெளிக்கிட்ட ஒருத்தரை முந்தியொருக்கா இப்பிடித்தானே கட்சியை விட்டு நிப்பாட்டிப் போட்டு, பிறகுதானே அவரைக் கூப்பிட்டுக் கதைச்சு டீல் பேசி, உறுப்புரிமையும் குடுத்தவர். அதுக்குப் பிறகு அவர் அடிச்ச செம்பில மயங்கிப்போய், பிரதேசத்துக்கு நிண்டவரை பார்லிமெண்ட் எலக்சனிலை நிக்கவைச்சவர் பதிலாளி. அதில அந்தச் செம்பார் தோத்தாலும், இப்ப பிரதேசத்துக்கு இறக்கி, திரும்பவும் தலைமைப்பதவியும் குடுத்தவர். இனிச் சிலைமோகனும் தீவிர செம்பா மாறிடுவார். அதைமாதிரி ஒழுக்காற்று நடவடிக்கையில நிப்பாட்டுப்பட்ட எல்லாரின்ர வீட்டுக்கும் உவர் பதிலாளி இரகசியமாப் போய் டீல் பேசி, அவையைத் தன்ர செம்புகளாக்கிக் கொண்டிருக்கிறார் எண்டு கதை அடிபடுகுது. முதலில கத்தரிக்காய் மலியட்டும், பிறகு எப்பிடியும் சந்தைக்கு வரத்தானே வேணும்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** சாதிக்கும்நாளாக அமையும். வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்தநாள்.

**தனுசு:** மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல் நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சிதரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# கஞ்சா வியாபாரம்; இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணத்தில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் 19 வயதான இளைஞரிடம் 11 கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டது. கைதுசெய்யப்பட்ட இளைஞரைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ச-20)

# மாற்றுத்திறனாளிகளின் நடனம் கிளிநொச்சி மாவட்டம் முதலிடம்

கிளிநொச்சி, ஜூன் 18

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய கலாசார நிகழ்ச்சித்திட்டத்தின் 'சித் ரூ 2025' நடனப்போட்டியில் வடக்கு மாகாண மட்டத்தில் கிளிநொச்சி மாவட்டம் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன்விருத்தி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் ஐந்து மாவட்டங்களின் மாற்றுத்திறனாளிகள் குழுவினர் பங்குபற்றியிருந்தனர். இதில் கிளிநொச்சி மாவட்டம் முதலாம் இடத்தையும் யாழ்ப்பாண மாவட்டம் இரண்டாம் இடத்தையும் வவுனியா மாவட்டம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. (ச-113)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 18

குருநகரில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை குருநகர் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

விசேட ரோந்து நடவடிக்கைகளின் போது சந்தேகத்துக்கிடமாக நடமாடிய 22 வயதான இளைஞர் ஒருவரை சோதனையிட்டபோதே அவரிடமிருந்து 10 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-22,125)

# குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 18

தென்மராட்சி நாவற்குழி கிழக்கு காதவாய்க்கால் தெருவருகு பிள்ளையார் தேவஸ்தான பரிவார தட்சிணாமூர்த்தி சண்டேஸ்வரர் சன்னிதான பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது. (ச-41-159)




# கணினிக்கூடம் திறந்துவைப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 18

மாணவர்களுக்கான இலவசக் கணினிக்கூடத் திறப்பு விழாவும் நல்லூர்ப் பிரதேசசபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பின் தலைவர் செ.ஜெகபாலனுக்கான வரவேற்பு நிகழ்வும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பின் அலுவலக மண்டபத்தில் இடம்பெற்றன.

கோண்டாவில் நலன்புரிச் சங்கம் லண்டன் கிளையின் 15 இலட்சம் ரூபா நிதிப் பங்களிப்பில் இந்தக் கணினிக்கூடம் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-22,66)



கரவெட்டி குழந்தையேசு முன்பள்ளியின் 2025ஆம் ஆண்டுக்கான விளையாட்டு நிகழ்வில் மாணவருக்கான வெற்றிக் கேடயம் மற்றும் பரிசினை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் மருத்துவக் கலாநிதி மகேந்திரன் வாசுதேவனும் முன்பள்ளி அதிபரும் வழங்கிவைத்தனர். (ச-41)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

ஒருவனிடம் இருக்கவேண்டிய முதன்மையான குணம் துணிவாக இருப்பதே ஆகும். ஏனென்றால், அந்தத் துணிச்சல்தான் மற்ற எல்லாக் குணங்களுக்கும் அடிப்படையானதாகும்.

– வின்சென்ட் சேர்ச்சில்–


# ஏனிந்த திடீர் வரிசைகள்?

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் எரிபொருள் நிரப்புநிலையங்களில் திடீரென ஏற்பட்ட வரிசைகள், அதன் தொடர்ச்சியாக நேற்று வடக்கின் ஏனைய இடங்களிலும் பரவிவிட்டது. ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான ஏவுகணைப்போரால், இங்கும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்று பரவிய வதந்தியே இப்படித் திடீர் வரிசையுகத்தை உருவாக்கிவிட்டது. இந்த வதந்தியைக் கேட்டதும் பதகளித்த மக்கள் எரிபொருள் நிரப்புநிலையங்களில் நீண்ட வரிசைகளில் நின்று, எரிபொருள் நிரப்புநிலையங்களின் இருப்பையெல்லாம் காலிசெய்து ஒரு செயற்கை எரிபொருள் தட்டுப்பாட்டை ஏற்படுத்திவிட்டனர்.

போர் இடம்பெற்றபோது தமிழ்மக்களின் இந்த முன்னெச்சரிக்கைப் போக்கே அவர்களைக் காப்பாற்றியது என்பதை மறுக்கமுடியாதுதான். பொருளாதாரத்தடைக்கு மத்தியில் வாழ்க்கையைக் கொண்டுநகர்த்த தமிழ்மக்களின் இவ்வாறான தட்டுப்பாட்டுப் பொருள்களைச் சேமித்துவைக்கும் பழக்கம் கைகொடுத்திருந்தது. இப்போது காலம் நிலைமை மாறியிருந்தாலும் மக்களின் அடிமனதில் மறையாதிருக்கும் வடுக்கள் சில சந்தர்ப்பங்களில் அச்சத்தை பதற்றத்தை ஏற்படுத்திவிடுகின்றன. தட்டுப்பாடு என்றவுடன் முன்னெச்சரிக்கையாக பொருள்களைச் சேமித்துவிடவேண்டும் என்ற வேகமும் அவற்றில் ஒன்றே. தற்போது அதைப் பலரும் கிண்டலடித்தாலும், கடந்தகாலங்கள் தமிழ் மக்களுக்குக் கற்பித்த கசப்பான அனுபவங்களின் வெளிப்பாடு அது என்றே கொள்ளவேண்டும். அதே நேரம், இவ்வாறான செயற்பாடுகள் பல நெருக்கடிகளுக்கு வழிகோலும் என்பதைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளவேண்டும். எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற வதந்தியை நம்பி அனைவரும் எரிபொருள்நிரப்புநிலையங்களில் வரிசைகட்டினால் நிச்சயம் ஒரு செயற்கைத் தட்டுப்பாடு ஏற்படவே செய்யும். எரிபொருள் நிரப்புநிலையங்களில் வழமைக்கு மாறாக எரிபொருள் இருப்புகள் விரைவாக முடிவடைந்தால், அடுத்த இருப்பு வரும்வரையில் எரிபொருள் நிரப்புநிலையங்கள் மூடப்படுவதைத் தவிர்க்கமுடியாது. உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வெளியாகாத நிலையில் வதந்திகளை நம்பிச் செயற்படுவதுவர்த்தகமாபியாக்களைஉருவாக்குமே தவிர, வேறெதையும் செய்துவிடப்போவதில்லை. வதந்திகளை நம்பி கையில் உள்ள பணத்தை செலவு செய்து திண்டாடுவதைத் தவிர்த்து, மக்கள் சிந்தித்துத் செயலாற்றவேண்டும். மறுபுறத்தில் மக்கள் முண்டியடித்து இவ்வாறு கொள்வனவுசெய்வதால், அத்தியாவசியத் தேவைகளுக்குக்கூட எரிபொருளைப் பெறமுடியாத நிலைமை தோன்றுவிக்கப்படுவதைக் கண்கூடாகப் பார்க்கமுடிகின்றது.

வளைகுடா நாடுகளில் ஏற்பட்டிருக்கும் போர்ப் பதற்றத்தால் உடனடியாக நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடப்போவதில்லை. அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் அதைக் கையாள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பாகவோ, எரிபொருள் விநியோகம் தொடர்பாகவோ மாகாணத்தின் உயர் அதிகாரிகள், அரசாங்கம் உரிய அறிவுறுத்தல்களை வழங்குவர். எரிபொருள் இருப்புகள் போதியளவு உள்ளன என்று அரச அதிகாரிகள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். ஆகையால் சமூக ஊடகங்களிலும், சமூகத்திலும் பரவும் வதந்திகளை நம்பிப் பதற்றமடைந்து செயற்பட்டு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தாது, ஆராய்ந்து செயற்படவேண்டும். அன்றாட வேலைகளைக்கைவிட்டு வரிசைகட்டுவதை நிறுத்தினால், செயற்கைத் தட்டுப்பாடு நீங்கி இயல்பு நிலைமை திரும்பும் என்ற யதார்த்தத்தை பொது மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



கடன் மறுசீரமைப்பு

## இலங்கை - பிரான்ஸ் இடையே இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்து



கொழும்பு, ஜூன் 18

**வெளிநாட்டுக்கடன் மறுசீரமைப்புச் செயன்முறை தொடர்பாக இலங்கைக்கும் பிரான்ஸுக்கும் இடையிலான இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.**

இதற்கான உத்தியோகபூர்வ கையொப்பமிடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றதாக நிதியமைச்சு உறுதிப்படுத்தியது. கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்கவும், அதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் கடன் மறுசீரமைப்பு செயல்முறையை விரைவில் முடிப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுக்கு இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது ஒரு சான்றாகும் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த ஒப்பந்தம் பிரான்ஸ் மற்றும் இலங்கை இடையேயான ஆழமான மற்றும் நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் வளர்ப்பதற்கு வழிவகுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு இரண்டு புதிய நீதியரசர்கள்

கொழும்பு, ஜூன் 18

மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு இரண்டு புதிய நீதியரசர்களை நியமிப்பதற்கு அரசியலமைப்புப் பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்யா பட்டபெந்தி மற்றும் சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி பிராங்க் குணவர்தன ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக நியமிக்கப்படுவதற்கு அரசியலமைப்புப்பேரவையின் அனுமதி கிடைத்துள்ளது. இந்த நியமனங்கள், பிரதம நீதியரசர் முர்து பெர்ணான்டோவின் பரிந்துரையின் அடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் முன்மொழியப்பட்டன. (ச-இ)

## மாணவர்களுக்கு புலமைப்பரிசில்




கொழும்பு, ஜூன் 18

2023/24 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் மாவட்டரீதியில் சகல துறைகளிலும் சிறப்புத் தேர்ச்சிபெற்ற 60 மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.


இதன் முதற்கட்ட நிகழ்வு இம்மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. (ச-41-6)

## இஸ்ரேலுக்குத் திரும்பமுடியாத இலங்கைத் தொழிலாளர்கள்

கொழும்பு, ஜூன் 18

விடுமுறையில் இலங்கை வந்துள்ள இஸ்ரேலில் பணிபுரியும் தொழிலாளர்கள் இஸ்ரேலுக்குத் திரும்பிச்செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு விடுமுறையில் இலங்கை வந்து திரும்பிச்செல்லமுடியாத தொழிலாளர்களின் விசா காலாவதியானால் அவர்களை உடனடியாக இஸ்ரேலிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் தொடர்புகொண்டு 0718447305, 0716833513, 0719 742095 என்ற வாட்ஸ் அப் இலக்கங்களினூடாக தகவல்களை அனுப்பிவைக்குமாறும் இஸ்ரேலிலுள்ள இலங்கைத்தூதரகம் அறிவித்துள்ளது. (ச-41-6)



## முதியோரின் முறைப்பாட்டுக்கு தொலைபேசி எண் அறிமுகம்

கொழும்பு, ஜூன் 18

தமது பிள்ளைகளாலும் ஏனையோராலும் துன்புறுத்தப்படும் முதியோர்கள் முறைப்பாடுசெய்வதற்கென தொலைபேசி இலக்கமொன்றை முதியோர் செயலகம் அறிவித்துள்ளது. முதியோர் துன்புறுத்தல் விழிப்புணர்வுத் தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. துன்புறுத்தல்களை எதிர்கொள்ளும் முதியோர் **070 789 8889** என்ற வட்ஸ் அப் இலக்கத்துக்கு முறைப்பாடுசெய்யலாமென முதியோர் செயலகம் அறிவித்துள்ளது. (ச-41-6)

நாளை
வியாழக்கிழமை- ஆனி 05
19.06.2025
சுபநேரம் : 07.24- 08.54
ராகுகாலம் : 01.24-02.54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லுண்டாயில் தீமூட்டல் பயணிகள் தொடர் அவதி

யாழ்ப்பாணம், ஜூன் 18

கல்லுண்டாயில் திண்மக்கழிவுகளுக்கு தீ மூட்டுவதால் தொடர்ந்தும் மக்கள் அவதியுற்றுவருவதுடன் நவாலி தெற்கு வடக்கு நவாலிப் பிரதேசங்கள் சூழல் மாசுபாட்டையும் எதிர்கொள்கின்றன என்று சண்டிலிப்பாய் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கல்லுண்டாய் குப்பைமேட்டில் யாழ். மாநகரசபையால் இரவுநேரங்களில் தீ மூட்டப்படுகின்றது. இதனால் வீதியால் பயணித்த பெண்ணொருவர் அண்மையில் மயங்கிவீழ்ந்த நிலையில் அம்புலன்ஸில் அனுப்பிவைக்கப்பட்டார். இவ்விடம் இலையான்கள் உற்பத்திசெய்யப்படும் இடமாகவும் சுவாசநோய்களை ஏற்படுத்தித்தரும் இடமாகவும் மாறியுள்ளது என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான இளங்குமரன் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ். மாநகரசபை உழவு இயந்திரங்கள்மூலம் திண்மக்கழிவுகளை அகற்றும்போது மூடியே கொண்டு செல்லவேண்டும். இனிவருகின்ற காலங்களில் உழவு இயந்திரங்கள் குப்பையை மூடாது கொண்டு வந்தால் சட்டநடவடிக்கைகளை எடுப்போம் - என்றார். இதன்போது கருத்துத் தெரிவித்த மானிப்பாய் பிரதேசசபை உறுப்பினர் பகீரதன், குப்பையைக் கொட்டும் மாநகரசபை மருந்து விசிறவேண்டும், குப்பையை எரிக்கக்கூடாது என நீதிமன்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் அவை மீறப்பட்டுள்ளன - என்றார். (ச-125)

முல்லைத்தீவில்

# வர்த்தமானி அறிவித்தலுக்கமைய கடற்படை முகாமுக்கு காணிசுவீகரிப்பு

## மக்கள் எதிர்ப்பால் இடைநிறுத்தம்!

**முல்லைத்தீவு, ஜூன் 18**

**முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிலாவத்தைப் பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் காணியில் கடற்படையினர் தளம் அமைப்பதற்காக வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அளவீட்டுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.**



இதன்போது மக்கள் மற்றும் காணியின் உரிமையாளர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததையடுத்து அளவீட்டுப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கரைத்துரைப்பற்றுப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சிலாவத்தைக் கிராமத்தில் கடற்படை முகாம் 2009 ஆம் ஆண்டு போருக்குப் பின்னர் நீண்டகாலமாக அமைந்துள்ளது. இந்தக் காணியானது நான்கு பேருக்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் நிலமாகும்.

1981 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தக் காணியில் தாங்கள் வசித்துவந்தோம் 2004 ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின்போது காணிக்கான ஆவணங்கள் அனைத்தும் அழிந்துள்ளன.

எமக்கான எந்த ஆவணமும் இல்லாத நிலையில் 2009 ஆம் ஆண்டு போருக்குப் பின்னர் குறித்த காணியில் கடற்படைரையினர் முகாம் அமைத்து வசித்துவருகின்றனர்.

இந்தக் காணியை உரிய உரிமையாளர்களுக்கு வழங்கக் கோரி பல தடவைகள் மாவட்டச் செயலருக்கு பொதுமக்களால் பல்வேறு கோரிக்கைகள் விடுத்தும் எந்த விதப் பயனும் கிடைக்கவில்லை. இந்தநிலையில் காணியை சுவீகரிக்கவுள்ளதாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் காணிக்கான அளவீட்டுப் பணிகள் நேற்று மேற்கொள்ளப்பட்ட நிலையில் மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டதைத் தொடர்ந்து அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. (ச-19)

யாழ்.போதனாவில்

# பதில் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு இருவர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன் 18

நீண்டகாலமாக யாழ். போதனா மருத்துவமனையில் நிலவிய பதில் நிர்வாக உத்தியோகத்தர் பதவி நிலை 2 இற்கு இரு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே பணிபுரிந்த ஒருவர் குறித்த பதவி நிலையில் இருந்து விலகிச்சென்ற நிலையில் குறித்த பதில் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு வெற்றிடம் நிலவிவந்தது. இந்த நிலையில் திருமதி துஷ்யந்தி பரந்தாமன், திருமதி ஏ.எஸ். யூட் நிமலன் ஆகியோர் இந்தப் பதவிநிலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-22,125)



# நயினாதீவு நாகபூசணி அம்மன் மஹோற்சவ ஏற்பாடுகள் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 18

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள நிலையில் மஹோற்சவ கால முன்னாயத்தப் பணிகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்டப் பதில் செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மேலதிக செயலாளர் சிறீமோகனன், உதவி மாவட்டச் செயலாளர் தர்ஷினி, வேலணை பிரதேச செயலாளர், நயினாதீவு அறங்காவலர் சபையினர் என துறைசார்ந்தோர் கலந்துகொண்டனர்.

இதன்போது நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ காலத்தில் 11 ஆம் திருவிழா வரை 50 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். 11 ஆம் திருவிழாவில் இருந்து இறுதித் திருவிழா வரை மேலதிகமாக 50 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இதே வேளை மேலதிக பாதுகாப்புக் கடமைகளுக்காக 20 பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர். மேலும் 150 சாரணர்கள் வரை சேவைகளை வழங்கவுள்ளனர். இலங்கை செஞ்சிலுவை சங்கம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் என்பனவும் கடமையில் ஈடுபடவுள்ளது.

அத்துடன் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை மற்றும் பிரதேசசபை நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளன. ஆலய உட்புறச் சூழலில் 30 பேர் வரை கழிவகற்றல் நடவடிக்கைகளுக்காக ஆலய அறங்காவலர் சபையினால் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இதேவேளை ஆலய வெளிப்புறச் சூழலின் கழிவகற்றல் நடவடிக்கைகளுக்காக ஆறு ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

மேலும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயக் கோபுரத்தில் இருந்து இறங்குதுறைவரை கச்சான் கடைகளை ஏற்கனவே வைத்திருக்கும் வியாபாரிகளுக்குப் பொருத்தமான இடத்தை தெரிவுசெய்து வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)

# சொந்தக்காலில் நிற்பதற்கு முயற்சிசெய்யவேண்டும்!

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 18

வெளிநாட்டு உதவிகளில் நாம் தொடர்ந்தும் தங்கியிருக்கமுடியாது. வெளிநாட்டிலுள்ள அடுத்த தலைமுறைகள் சந்ததிகள் மாறும்போது இந்த உதவிகள் எதிர்காலத்தில் நின்றுபோகக்கூடும். எனவே நாம் எமது சொந்தக்காலில் நிற்கத் தயாராகவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி, கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய எமது சமூகச்சூழல் மாற்றமடைந்து செல்கின்றது. பல குடும்பப் பிரச்சினைகள் தோற்றம்பெறுகின்றன. எனவே அந்தப் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு இவ்வாறான சிறுவர் இல்லங்கள் அவசியமாகின்றன. பிள்ளைகளுக்கு வீடுகளே சிறந்த பாதுகாப்பு என்றபோதும், அந்த வாய்ப்புக்கிடைக்காத பிள்ளைகளுக்கு இல்லங்களே அரணாக அமைகின்றன. இன்று மாணவர்கள் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்றமையால் பல பாடசாலைகள் வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து மூடப்பட்டுவருகின்றன. ஆனால் இங்கு 200 இற்கு மேற்பட்ட பிள்ளைகள் இருக்கின்றார்கள். இதுவும் ஒரு பாடசாலைதான்.

இதேவேளை, வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர், சிறுவர் இல்லச் சிறுவர்களுக்கு தொழிற்பயிற்சிக் கற்கைநெறிகளை - என்.வி.க்யூ. சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்கவிருக்கின்றார். இதன்மூலம் சிறுவர் இல்லத்திலிருந்து சிறுவர்கள் சமூகத்துக்குச் செல்லும்போது அவர்கள் தமது சொந்தக்காலில் நிற்கமுடியும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் – ஈரான் முறுகலால் இலங்கைக்கு கடும் பாதிப்பு!

## பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 18

**ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான தற்போதைய இராணுவ நிலைமை அதிகரித்தால், இலங்கையில் எரிபொருள் விலைகள் உயரக்கூடும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.**

இந்த இராணுவ நிலைமை பிராந்திய ரீதியாக பரவினால், சுற்றுலாத் துறை உட்பட இலங்கையில் பல துறைகளைப் பாதிக்கும் அபாயம் உள்ளது என்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையின் பேராசிரியர் பிரியங்கா துனுசிங்கே சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள போர் பதற்றத்தால் இலங்கையைப் பாதிக்கும் பல காரணிகள் உள்ளன. முக்கியமானது எரிபொருள் விலை அதிகரிப்பு. உலக சந்தையில்கச்சாஎண்ணெய்விலையை ஏற்கனவே பத்து முதல் பன்னிரண்டு சதவீதம் வரை அதிகரித்துள்ளது. இந்தப் போர் பிராந்திய ரீதியாக பரவினால், இலங்கைக்கு கிடைக்கப்பெறும் அந்நிய செலாவணியை மோசமாக பாதிக்க அதிக வாய்ப்புள்ளது. இந்த நிலைமை இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு உள்ளிட்ட நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள்மீது மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். வேலை, பாதுகாப்பு, புதிய வேலை வாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை என்பன கடுமையாகப் பாதிப்படையும் - என்றார். (எ-இ)

# 6 ஐ.ம.ச. உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை நீக்கம்

கொழும்பு, ஜூன் 18

ஐக்கிய மக்கள் சக்தியின் தம்புள்ளைப் பிரதேச சபையின் 6 உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை உடன்நடைமுறைக்கு வரும்வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்திக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளைப் பிரதேசசபையின் தலைவர் மற்றும் உப தலைவரை நியமிப்பதில் ஐக்கிய மக்கள் சக்திக்கட்சி நிர்வாகக்குழு மற்றும் கட்சிச் செயற்குழுவின் முடிவுக்கு இணங்க செயற்படத் தவறியதன் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**கிருஸ்ணபிள்ளை இந்திராணி**
**(திரவியம்)**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29.10.1943 | 26.06.2024 |

எங்கு சென்றீர்கள் அம்மா
ஓர் ஆண்டு என்ன ஆண்டுகள் பல
சென்றாலும் என்றும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டகலாது.

23, காரைகாட்டு லேன்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
கிருஸ்ணபிள்ளை குடும்பம்
(வேலுப்பிள்ளை)



# துப்பாக்கிச் சூட்டுக்கு உடந்தை; ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 18

துப்பாச்கிச்சூட்டுக் கொலை முயற்சிக்கு உதவிய குற்றச்சாட்டில் ஒருவர் நீர்கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர் நீர்கொழும்பைச் சேர்ந்த 27 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சீதுவை கொட்டுகொடைப் பிரதான வீதியில் 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி பெண்ணொருவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்திலேயே சந்தேகநபர் உடந்தையாக இருந்தார் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

# ஏறாவூர் நகரசபை மு. காங்கிரஸ் வசம்

கொழும்பு, ஜூன் 18

ஏறாவூர் நகரசபைக்கான தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் தெரிவு நடைபெற்றநிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்ட எம்.எஸ். நளீமுக்கு ஆதரவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த7 உறுப்பினர்கள், ஜனநாயக தமிழ் கூட்டமைப்பை சேர்ந்த ஒரு உறுப்பினர், தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் என மொத்தமாக 9 உறுப்பினர்கள் வாக்களித்தனர். தேசிய மக்கள் சக்தி வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எம். எஸ். சமீமுக்கு 7 உறுப்பினர்கள் வாக்களித்தனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த எம்.எஸ்.நளீம் 2 மேலதிக வாக்குகளால் ஏறாவூர் நகரசபையின் தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (எ-இ)

# சாமரவுக்கு எதிரான வழக்கு அடுத்த மாதம் விசாரணை

கொழும்பு, ஜூன் 18

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு எதிரான ஊழல் வழக்கு அடுத்த மாதம் 18ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டுள்ளார்.

வங்கிக் கணக்குகளின் நிலையான வைப்புகளை முதிர்வுகாலம் முடிவடைவதற்கு முன்னர் பெற்றுகொண்டதால் அரசாங்கத்துக்கு 176 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாக சாமர சம்பத் தசநாயக்கவுக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 . 04 . 1944 | 16 . 06 . 2025 |

**உஷாதேவி செல்வநாதன்**

சங்கானை தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட உஷாதேவி செல்வநாதன் அவர்கள் கடந்த (16.06.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற எட்வேட் துரைசிங்கம் (சங்கானை துரை) - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நவரத்தினம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும்,

செல்வநாதனின் ஆருயிர் மனைவியும்,

ஹரிராம், கமலறாம், நிலாந்தி, மாதினி ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

ஜொய்லின், கிருஷ்ணவேணி, பாலசஜீஸ்வரன், கஜரூபன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,

சஷ்ணி, கிருஜன், சரன், ரிஷி வர்ஷி, யாமிலன், லகஷ்கா - சஞ்ஜீவன், கஜானணி, சதூஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும்,

காலஞ்சென்ற சறோஜினிதேவி, காலஞ்சென்ற சாந்தாதேவி, பிறேமா, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

காலஞ்சென்ற S.R தர்மலிங்கம், காலஞ்சென்ற ஜெயானந்தன், காலஞ்சென்ற மனோகரன், பிறேமா ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

கௌசல்யா, அகல்யா, சடாஜினி, சித்திரா, பஞ்சகிரிதா, தர்மினி, முரளிதரன், தமயந்தி ஆகியோரின் பாசமிகு சின்னம்மாவும்,

லின்ஸியின் (Lindsy) பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (18.06.2025) புதன்கிழமை 10am - 4:30pm பார்வைக்கு வைக்கப்பட்டு, நாளை (19.06.2025) வியாழக்கிழமை மீண்டும் பார்வைக்கு 9 am -12 pm வைக்கப்பட்டு பிற்பகல் ஒரு மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
071 532 4043

(CS/3419) J-1

# 2000 வேட்பாளர்கள் மீது சட்டநடவடிக்கை

வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறிய 2ஆயிரத்து 433 உள்ளூராட்சி வேட்பாளர்களின் பெயர்கள் சட்ட நடவடிக்கைக்காக பொலிஸாருக்கு அனுப்பப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார். உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 76ஆயிரத்து 992 வேட்பாளர்கள் தங்கள் வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனர். அவை மாவட்டச் செயலகங்களில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
### கிரிக்கெட் கடினப்பந்து புற்தரை பராமரிப்பாளர் (Turf) நியமனங்கள்


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் **கடினப்பந்து புற்தரை (Turf)** பராமரிப்பிற்காகவும் தொடர் செயற்பாட்டு நடவடிக்கைக்காகவும் இருவருக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. எனவே விரும்புவோர்கள் சுயவிபரக்கோவையை கீழுள்ள விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பயிற்சி வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு :**
**அதிபர்**
**இராஜேந்திரபிரசாத் வீதி.**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**யாழ்ப்பாணம்**
**0778695687 அதிபர்**
**0777687821 திரு.S.றஜீவன்**

**அதிபர்**

# மரண அறிவித்தல்



**சுப்பிரமணியம் சிவபாலன்**

(சிப்பால் மாஸ்ரர் , சோதிடர் , ஓய்வு நிலை தபால் ஊழியர்)

**தோற்றம்** 07.04.1947 **மறைவு** 13.06.2025

கொக்குவில் கிழக்கு சேர்ச் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவபாலன் அவர்கள் கடந்த 13.06.2025 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் , வசந்தகுமாரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தேவபாலன் மற்றும் சந்திரவதனா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அரியதாஸ், மீனா (கனடா), ரஞ்சினி, கமலா, ஆகியோரின் மைத்துனரும், குகதாஸ், மகேஸ்வரி (கனடா) சண்முகராசா ஆகியோரின் சகலனும் , துசியந்தி , துளசிதாசன் , சபிதா, கோபி, கயன், வினோ, கௌசி, தரணியா ஆகியோரின் பெரியப்பாவும், கிருபாகரன், பிரபாகரன், வாசுகி, தேவகி, சுதாகரன், கார்த்திகா, அனித்தா ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.06.2025) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கொக்குவில் கிழக்கு,**
**குளப்பிட்டி**

**தகவல்**
**குடும்பத்தினர்**

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 . 03 . 1970 | 21 . 05 . 2025 |



**எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த (21.05.2025) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி**

**அமரர் திருமதி.கேதீஸ்வரன் கௌரி (லலிதா)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 18.06.2025 புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (20.06.2025) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் கொக்குவில் மஞ்சவனப்பதி மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிராத்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

**பத்தானை வீதி,**
**தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

**வரன் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்**
**077 905 0188**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 . 02 . 1952 | 15 . 06 . 2025 |



## வேலுப்பிள்ளை கந்தையா

காரைநகர் கோவளம் நட்டுப்பாளியை பிறப்பிடமாகவும், வேம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா அவர்கள் கடந்த 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நமசிவாயம் - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சிவகலா அவர்களின் அன்புக்கணவரும், சிவரஞ்சினி (ஹொலண்ட்), விக்கினேஸ்வரன் (இலங்கை), திவாகரன் (கனடா), சசிகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சுந்தரசிவம் (ஹொலண்ட்), நிரஞ்சனரூபி (இலங்கை), மஞ்சுளா (கனடா), தனரஞ்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, ஏகநாயகி, ஈஸ்வரி, துரைராசா, குணரட்ணம், மற்றும் தங்கரட்ணம், ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும், சுஜீவன், ஆராதனா, மிதுஷா, திபிஷா, யஷ்விதா, சாதனா, டிலக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை 19.06.2025 காலை 07.00 மணியளவில் அவரது வேம்படி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வேம்படி,**
**காரைநகர்.**
**077 [illegible]6**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்**

(CS/88609) -1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

வடமாகாணத்தில் இயங்கும் நிர்மாண நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் உடன் தேவை. தங்குமிட வசதி, சலுகைகளுடன் தொடர்ச்சியாக வேலையும் வழங்கப்படும்

- தச்சு வேலை
- வெல்டிங் வேலை
- வர்ணம் பூசுபவர் (Painter)

தொடர்புகளுக்கு: 077 817 6393, 077 712 0945

## மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்

**உள்ளூராட்சி சபைத் தேர்தல்-2025**

**சமூக முன்னோடி இளவல், சமூக சிரோன்மணி**

**ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள்**



வலி வடக்கு பிரதேச சபையின் 9ம் வட்டாரத்தில் (மாவை வீமன் காமம்) இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு பிரதேச சபை உறுப்பினராக மக்களின் பெரும் பாண்மையான ஆதரவுடன் தெரிவு செய்யப் பட்டமையினை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:

மாவை சித்தி சிநாயகர் அம்பாள் ஆலயம்
சமூக முன்னேற்ற கழகங்களின் சமாசத்தின் பணிப்பாளர் சபை
மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம்
மாவை பாரதி சன சமூக நிலையம்
மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் மாணவர் மன்றம்.

## வரைவுள்ள வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

## பதவி வெற்றிடங்களுக்கு வெளிவாரி விண்ணப்பம் கோரல்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் வெற்றிடமாகவுள்ள பொதுமுகாமையாளர் பதவிக்கு வெற்றிடம் நிரப்புவதற்காக தகமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**பதவிக்கான பெயர் :- பொதுமுகாமையாளர்**
குறியீட்டு இலக்கம் :-101/06
சம்பள அளவுத்திட்டம் :-37045-490x10-540x10-47345 (02/2025 சுற்றுநிருபம்)
444540-5880X10-6480X10-568140

(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் சுற்றுநிரூபத்திற்கு அமைவாக கொடுப்பனவு வழங்கப்படும்)

**வெற்றிடம் :- 01**

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்**

அ). கூட்டுறவு ஊழியர் 07 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 08 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ). அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம்/ அதற்கு சமமான தகைமை. இத் தகைமையானது கணக்கியல்/ வியாபாரப்புள்ளிவிபரவியல்/ வியாபாரக்கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்/
இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில கணக்கியல்/ முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

**அல்லது**

இ). கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப்பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 0[illegible] ஆண்டு கால அனுபவம்.
க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 07 ஆண்டு கால அனுபவம்.

**குறிப்பு :-**

1. விண்ணப்ப முடிவுத்திகதியில் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்கழிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் தாங்கள் கடமை புரியும் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தமது கூட்டுறவுச் சங்கத்தினூடாக விண்ணப்பிக்காது விடில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. சங்கம் கோரும் பிணைப் பணத்தினை ரொக்கமாக செலுத்துவதுடன் சங்கம் கோரும் ஆதனப் பிணையும் செலுத்துதல் வேண்டும்.
3. **விண்ணப்ப முடிவுத்திகதி 02.07.2025**
4. சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்ப படிவத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்து சான்றிதழ்களின் போட்டோப்பிரதிகளை இணைத்து 02.07.2025 ஆம் திகதிக்கு முன்னர் **"தலைவர், வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, பிப்பிலிச்சந்தி மானிப்பாய்"** எனும் முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

18.06.2025
**தலைவர்,**
**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,**
**பிப்பிலிச்சந்தி, மானிப்பாய்.**




## அதிபர் பதவி வெற்றிடம் நிரப்புதல்

தீவக வலயத்திற்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

| இல | பெயர் | வகை |
|---|---|---|
| 01 | யா/ எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம் | II |
| 02 | யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகா வித்தியாலயம் | II |
| 02 | யா/ வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம் | III |
| 03 | யா/ புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி த.க வித்தியாலயம் | III |

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் நிபந்தனைகளுடன் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள் :-**

- விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 03 வருடங்களாவது சேவையாற்றக்கூடிய வயதெல்லையை கொண்டிருத்தல் வேண்டும்
- Type -II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் -II இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இலங்கை அதிபர் சேவை தரம் -II இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பம் கிடைக்கப் பெறாத விடத்து மட்டும் அல்லது தெரிவுகள் எவையும் இடம்பெறாவிடத்து மட்டும் இலங்கை அதிபர் சேவை தரம் -III இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.
- Type - III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு III இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பப் படிவங்களை தீவகக் கல்வி வலய நிர்வாகப்பரிவில் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 2025.06.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **"வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தீவகம்,குறிகட்டுவான் வீதி, வேலணை"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குவும்

**பணிப்பாளர்**
(CR/45190) J-1

**வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்துதல் - வெங்கலச்செட்டிகுளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து), செட்டிகுளம்.**

வரையறுக்கப்பட்ட வெங்கலச் செட்டிகுளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் குறைந்த பட்சம் ரூபா 100.00 பங்குப்பணம் செலுத்தி ஒரு வருடம் பூர்த்தியான 31.03.2024ம் திகதியில் முடிவுறுத்திய சங்கத்தின் உபவிதிகளுக்கமைய வாக்களிக்கத் தகுதி பெற்ற அங்கத்தவர்களின் பெயர் விபரங்கள் உள்ளடங்கிய வாக்காளர் பட்டியல் சங்கத்தின் தலைமை அலுவலகத்திலும், கிளைகளிலும் 16.06.2025 தொடக்கம் 01.07.2025 வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அதனை பார்வையிட்டு ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் 09.07.2025ம் திகதிக்கு முன்னராக "செயலாளர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ/து), செட்டிகுளம்" என்னும் முகவரிக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வெங்கலச் செட்டிகுளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து),
செட்டிகுளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பெருந்தன்மை என்பது, உங்களால் முடிந்ததைவிட அதிகமாகக் கொடுப்பது; பெருமை என்பது உங்களுக்கு தேவையானதைவிட குறைவாக எடுத்துக்கொள்வது.
>
> - கலீல் ஜிப்ரான்





# இலங்கையின் உயர்கல்வி

## சவால்கள், பின்தங்கியமை மற்றும் மாற்றத் தேவைகள்

■ சி.சிவாகரன்
*அதிபர் மற்றும் கல்வி ஆய்வாளர்*

இன்றைய உலகில் உயர்கல்வி என்பது தனிநபரின் சமூகமாறுதலுக்கும் ஒரு தேசத்தின் அறிவுப் பொருளாதார வளர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்குகிறது. ஆனால், இலங்கையின் உயர்கல்வித்துறையின் தற்போதைய நிலை, உலகளாவிய தரநிலைகளோடு ஒப்பிடும்போது மிகவும் கவலையளிக்கக்கூடியதாகவே காணப்படுகிறது.

**சர்வதேச அங்கீகாரமில்லாத தரமற்ற பல்கலைக்கழகங்கள்**

இலங்கையின் சில உள்ளூர் மற்றும் பெரும்பாலான தனியார் பல்கலைக்கழகங்கள், முக்கியமான சர்வதேச தரப்படுத்தல் அமைப்புகளின் அங்கீகாரம் இல்லாமல் இயங்குகின்றன. எத்தியோப்பியா, கானா, நைஜீரியா போன்ற நாடுகளின் பல்கலைக்கழகங்கள்கூட சர்வதேச அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இலங்கை இதுவரை அந்த நிலையை அடையாதது கவலைக்குரிய விடயமாகும்.

**பழமைவாதக் கற்பித்தல்**

பல பல்கலைக்கழகங்களில் இன்னும் பழமைவாத மற்றும் புத்தகக் கற்றல்முறை நிலவுகின்றது. விளைவு சார்ந்த கல்வி, செமஸ்டர் முறை, திட்ட அடிப்படையிலான கற்றல், டிஜிற்றல் வகுப்பறைகள் போன்ற புதிய தரநிலைகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன. இதனால் மாணவர்கள் தொழிற்றுறைக்கேற்ற திறன்களின்றிப் பட்டம் பெற்று வெளியேறுகின்றனர்.

**மருத்துவக் கல்வியில் குறைபாடு**

மருத்துவக் கல்வியில்கூட முழுமையான இணை மருத்துவப் பாடநெறிகள் இயங்குவதில்லை. பிசியோதெரபி, பேச்சுச் சிகிச்சை, தொழிற்சிகிச்சை போன்றவை இல்லாததால், மாணவர்கள் ஒருங்கிணைந்த சுகாதாரப் பார்வையை அடையமுடியவில்லை.
அத்துடன், பட்டக் கல்வியில் தொழிற்சாலை இணைப்பு, பயிற்சி வேலை, மற்றும் ஆய்வுப்பணி போன்றவை பெரும்பாலும் இடம்பெறுவதில்லை. இதனால் மாணவர்கள் தொழில்நுட்ப அறிவும், நடைமுறை அனுபவமும் இன்றி வேலையற்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

**உலகளாவிய இணைப்பு இல்லாமை**

பாடநெறிகள் பெரும்பாலும் உள்ளூர் மொழிகளில் கற்பிக்கப்படுவதால், மாணவர்கள் சர்வதேச எழுத்துகள், ஆய்வுகள், வேலைவாய்ப்புகள் போன்றவற்றில் பங்குபெறமுடியாத நிலை உருவாகிறது. மொழித்திறன்களை வளர்க்கும் முயற்சிகளும் குறைவாகவே உள்ளன.

**வேலைவாய்ப்புச் சிக்கல்கள்**


பட்டம் பெற்றபின்னும் வேலைவாய்ப்பில்லாமை என்பது ஒரு தேசியப் பிரச்சினையாக மாறியுள்ளது. இது மென் திறன்கள், தலைமைத்துவம், டிஜிட்டல் திறன்கள் போன்ற துறைகள் பாடநெறிகளில் இல்லாததனால் ஏற்படுகிறது. தொழில்நுட்பத் துறைகளில் வேலைபெறுவதற்கான சம்பந்தப்பட்ட அனுபவம் இல்லாமல், மாணவர்கள் மீண்டும் குறுகிய தரநிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

**மதிப்பீட்டு உரிமையின்மை**

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மதிப்பீட்டில் அதிகமான முரண்கள் உள்ளன:
திருத்தப்பட்ட விடைத்தாள்களை மாணவர்கள் பார்வையிடமுடியாது. மீள்மதிப்பீடு, மறுமதிப்பீடு போன்ற சட்டரீதியான வாய்ப்புகள் இல்லை.
மதிப்பீட்டாளர் விருப்பப்படி மதிப்பீடு நடைபெறுவது, மாணவர்களின் நியாயமான எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறது. இது கல்வியியல் நீதிக்கே ஒரு சவாலாக அமைந்துள்ளது. எனவே இவற்றின் அடிப்படையில் நோக்கின் பல்கலைக்கழகச் சட்டங்கள் மாற்றப்படவேண்டியது அவசியமாகும்.

**மாற்றத்துக்கான பரிந்துரைகள்**

மாணவர் திறன்களை அடிப்படையாகக்கொண்ட பாடத்திட்டம், விரிவுரையாளர்களுக்கான நவீன பயிற்சிகள், தொழில்நுட்ப மற்றும் தொழிற்றுறையுடன் இணைந்த பயிற்சிகள், சர்வதேச அங்கீகாரம், மதிப்பீடு மீளாய்வு விடைத்தாள் பார்வை போன்ற பொறிமுறைகள் உருவாக்கப்படுதல், பல்கலைக்கழகச் சட்டங்களில் கல்வியியல் நீதிக்கான திருத்தங்கள் உள்வாங்கப்படுதல் உள்ளிட்ட பல மாற்றங்களை இலங்கைப் பல்கலைக்கழக கட்டமைப்பில் உடன் செயற்படுத்தவேண்டியுள்ளது. இலங்கையின் உயர்கல்வித்துறை பின்தங்கிய கட்டமைப்பில் சிக்கித்தவிக்கிறது. உலகம் முன்னேறும் வேகத்தில், நாம் இன்னும் அடிப்படை நீதிமுறைகள், அறிவு சார்ந்த மாற்றங்கள், மற்றும் மாணவர் மேம்பாட்டுக்கு ஆதரவான சட்டங்கள் இல்லாமல் பயணிக்கிறோம். இது உடனடியாக சீர்திருத்தப்படவேண்டிய ஓர் அவசரமான நிலையாகவே உள்ளது. உயர்கல்வி என்பது ஒரு பட்டம் மட்டுமல்ல. அது ஒரு சமூகத்தின் அறிவுச் சுழற்சி. அதன் தரமே இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறது.



# ஏ.ஐ. (AI)

**மு.இ.நிழ்வான்**
*தமிழ்க் கற்கைகள் துறை*
*கிழக்குப் பல்கலைக்கழகம்*


மின் அலைகள் பின்னலிட்டு, எண்கள் உயிர்பெற்று,
அறிவுச்சுடர் எழுந்தது, புது உலகம் மலர்ந்தது.
கணினியின் கருவில் ஓர் உயிர் கருக்கொண்டது,
மனித மனதின் திறனை மிஞ்சிடத் துணிந்தது.

தரவுகள் சேகரித்து, பகுப்பாய்வு செய்து,
கற்று, புரிந்து, தெளிந்து, ஞானம் பெற்றது.
வேகமாய் சிந்தித்து விண்மீனைத் தொட்டு,
கடினப்புதிர்களை எளிதாய் முடித்தது.

கவிதை புனையும், சித்திரம் தீட்டும்,
நோய்களும் கண்டறியும், புதுவழி காட்டும்.
மனிதனின் துணைவன், உலகின் வழிகாட்டி,
எதிர்காலத்தின் திசைகாட்டும் ஒளிவிளக்கு.

ஆனாலும், ஓர் உண்மை மனதில் வைப்போம்,
உணர்வும் அன்பும் மனிதனுக்கே சொந்தம்.
இயந்திரம் உயர்ந்தாலும், அது வெறும் கருவி,
மனிதநேயமே என்றும் நிலைக்கும் பெருவழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குலேந்திரநாதன் பவதாரிணி




# செல்வச்சந்நிதி ஆலயமும் நாட்டாரியல் பண்புகளும்

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் இலங்கையின் வடபகுதியில் யாழ். மாவட்டத்தில் வடமராட்சி பகுதியில் ஆறு கடலுடன் சங்கமிக்கின்ற அழகான தொண்டைமானாற்றுக் கிராமத்தில் அமைந்துள்ள ஓர் ஆலயம் மட்டும் என்று நாம் மேலோட்டமாக கூறிவிடமுடியாது. ஏனென்றால் இவ்வாலயமானது கந்தபுராண காலத்திலிருந்தே புனிதமும் தொன்மையும் சிறப்பும்கொண்ட ஆலயமாக விளங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கவொன்றாகும். வீரவாகுதேவரால் தொண்டைமானாற்றில் சந்தியாகாலத்தில் பூஜைகள் செய்து வழிபட்டமையால் இவ்வாலயமானது சந்நிதி என்னும் பெயரால் அழைக்கப்பட்டது. பின்பு செல்வச்சந்நிதி எனும் சிறப்புப் பெயரைப் பெற்றது. இவ்வாலயமானது ஆகம விதிகளுக்கு அப்பாற்பட்ட ஆலயமாகும். அத்தோடு கதிர்காமக்கந்தனோடும் தொன்மையான தொடர்புடையது.

கதிர்காமக்கந்தனுக்கு வாய்கட்டி பூசை செய்பவர்கள் எப்படி "கப்புறாளைகள்"என்று அழைக்கப்படுகின்றனரோ அதேபோன்று செல்வச்சந்நிதி ஆலயத்தில் வாய் கட்டிப் பூசை செய்பவர்களை "பூசகர்கள்" என்று அழைக்கின்றனர். அதுமட்டுமல்லாது அன்றாடப் பூசை செயற்பாடுகளிலும் உற்சவகாலச் செயற்பாடுகளிலும் கதிர்காமத்தில் பின்பற்றுவது போன்று சடங்குகளும் சம்பிரதாயங்களும் செல்வச்சந்நிதி ஆலயத்திலும் பின்பற்றப்பட்டுவருகின்றன. வெறுமனே சந்நிதியாலயம் என்பது முருகப்பெருமானின் ஆலயம் என்றும் அங்கு நித்திய அன்னதானம் வழங்கப்படுவது என்றும் திருமணங்கள் இடம்பெறுவது என்றும்தான் மக்கள் மத்தியில் எண்ணம் உண்டு. ஆனால் அங்கு பல்வேறுபட்ட வழிபாட்டுமுறைகள் நாட்டாரியல் சார்ந்து வியக்கத்தக்க வகையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கவொன்றாகும்.

இவ்வாலயத்தில் முருகன் தெய்வம் வேல் வடிவில் பிரதிஷ்டை செய்து மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு வேல் வழிபாடானது நாட்டார் வழிபாட்டு முறைகளைப் பிரதிபலிக்கின்றது. இதற்கான வரலாறு குறித்து நோக்கும்போது இறுதியாக சூரபத்மனுடன் இடம்பெற்ற போர் முடிவடைந்து திரும்பும் பொழுது வீரவாகுதேவர் வேலொன்றை வைத்து முருகப்பெருமானை வழிபாடு செய்துள்ளார். இவ்வாறு வீரவாகு தேவர் வழிபாடு செய்த தொண்டைமானாற்றுப்பகுதிதான் (வல்லியாறு)இன்று செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்திருக்கின்ற பகுதி எனவும் நம்பப்படுகின்றது. இதனால் இங்கு வெள்ளியிலாலான வேல் வைத்து மூலஸ்தானத்தில் வழிபாடு செய்யப்படுகின்றது. இவ்வாலயத்தில் வெற்றிலை வழிபாடும் பூவரச மரவழிபாடும் காணப்படுகின்றன. இவ்வழிபாடானது நாட்டாரியல் அம்சத்தைக் கொண்டிருக்கிறது. கதிர்காமத்தை தரிசிப்பதற்காக சிகண்டி முனிவர் வந்துகொண்டிருக்கும்போது அங்கே வியாழபகவானால் சபிக்கப்பட்ட கந்தர்வனான ஐராவசு, மதம்கொண்ட யானை வடிவில் சிகண்டி முனிவரை தாக்குவதற்காக அவரை எதிர்கொண்டான். அப்போது சிகண்டி முனிவர் அங்கேயிருந்த வெற்றிலையை கிள்ளி சடாச்சர மந்திரத்தை உச்சரித்து வீசினார். அவ்வாறு அவர் வீசிய வெற்றிலை வேலாக மாறி யானையைக் கொல்ல யானை வடிவில் இருந்த ஐராவசு சாபவிமோசனம் பெற்று மானிடனானான். பின்பு கதிர்காமக்கந்தனது அருள்வாக்கிற்கு இணங்க வடபகுதிக்கு வந்து வல்லியாற்றுப் பகுதியில் இப்பொழுது செல்வச் சந்நிதியாலயம் அமைந்திருக்கும் ஆலயச் சூழலில் பூவரசு மர நிழலில் தவமிருந்து சமாதியானார் என்பது ஐதீகம். இவ்வாறு ஐராவசு தவம் இருந்த பூவரசு மரம் இவ்வாலயத்தின் தலவிருட்சமாக சிறந்துவிளங்குகின்றது. அத்தோடு இந்தப் பூவரச மரத்தில் மக்கள் தமது பல்வேறு வேண்டுதல்களை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் சிகண்டி முனிவர் வீசிய வெற்றிலை நுனியை நினைவுகூரும்முகமாக சந்நிதியில் திருவிழாக்காலங்களில் வீதி உலா வரும்போது வேலின் நடுவில் முக்கோண வடிவில் வெற்றிலை பதிக்கப்படுகின்றது. இது இவ்வாலயத்திற்குரிய தனித்துவமான அம்சமெனலாம். தற்போது சந்நிதி ஆலயம் அமைந்திருக்கும் தொண்டைமானாற்றுப்பகுதியில் முருக பக்தரான பரத குலத்தவர்களில் மூத்தவரும் பக்திமானுமாகிய "மருதர் கதிர்காமர்" என்பவர் தினமும் இவ்வாற்றில் மீன் பிடித்து சீவியம் நடத்திவந்தார். இவர் மீன்பிடிக்கச் செல்லும் முன்னர் இங்கு ஐராவசு சமாதியடைந்த பூவரச மரத்தினை வணங்கி செல்வதையே வழக்கமாக வைத்திருந்தார். இவரின் பக்தியினை அறிந்த முருகன் ஆற்றுப்பகுதியில் சிறுவனாக வந்து முருகபக்தரான மருதர் கதிர்காமரை ஆட்கொண்டு தனக்கு இவ்விடத்தில் ஆலயம் அமைத்து வழிபடக் கூறினார். அதற்கு மருதர் கதிர்காமர் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறவே; முருகப்பெருமான் கண்களை மூடுமாறு கூறி அவருக்கு கதிர்காமத்தில் பூஜைகள் இடம்பெறும் முறைகளை காண்பித்தார். இதன் வழித்தோன்றலாக கதிர்காமரின் காலம் தொடக்கம் இன்று அவரின் ஏழாவது தலைமுறை வரை அனைவரும் தொடர்ச்சியாக இம்முறையைப் பின்பற்றிவருகின்றனர். செல்வச்சந்நிதி ஆலயத்தில் பூஜைகளின்போது பறைமேளம் அடிக்கப்படுகின்றமை நாட்டாரியல் வழிபாட்டு முறைகளைப் பிரதிபலிக்கின்றது. பறை என்பது தமிழரின் பாரம்பரியத்தை வெளிப்படுத்துகின்ற கருவியாகும். இது மனதில் அமைதியை ஏற்படுத்தி இறைவனுடன் பக்திரீதியிலான தொடர்பை ஏற்படுத்துகின்றது. மருதர் கதிர்காமருக்கு முருகப்பெருமான், பறை ஓசை எப்போதும் கோவிலில் கேட்கவேண்டும் என்று கட்டளையிட்டமைக்கு அமைய அங்கே பறைமேளம் அடிக்கப்படும் மரபு இன்றும் தொடர்கின்றது.


இவ்வாலயத்தில் நெல், பயறு, வாழைக்காய் கொண்டு நெய்வேத்தியம் படைக்கப்படுகின்றது. அதாவது நெல்லை வைத்து அமுதும் பயறு, வாழைக்காயைக் கொண்டு கறி செய்து நெய்வேத்தியமாகப் படைக்கப்படுகின்றது. தினமும் 65 ஆலமர இலைகளில் அமுதுகொண்டதாக நெய்வேத்தியம் படைக்கப்படுகின்றது. ஏனெனில் முருகப்பெருமான் மருதர் கதிர்காமரிடம் 63 நாயன்மார்களுக்கும் உனக்கொன்று எனக்கொன்றுமாக 65 ஆலமர இலைகளில் படைக்குமாறு கூறியதாக நம்பப்படுகின்றது. இவ்வாறு நாட்டாரியல் பண்புகள் வழிபாட்டு முறைகளின்மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.



மேலும் இவ்வாலயம் சார்ந்ததாக மக்களிடையே தொன்றுதொட்டு சில நாட்டாரியல் நம்பிக்கைகளும் காணப்படுகின்றன. அதாவது குழந்தைப் பாக்கியம் வேண்டி சிறிய மரத்தாலான தொட்டில்கள் கட்டுதல், எவ்விதமான மாறாத நோயாக இருந்தாலும் கோயிலின் ஆற்றங்கரையில் நீராடி விபூதி பூசி தீர்த்தமருந்தினால் நோய் மாறிவிடும் என்பன போன்ற நம்பிக்கைகள் மக்களிடையே காலங்காலமாக் காணப்படுகின்றன. பல ஆலயங்கள் நவீனத்துக்குள் மூழ்கிக்கொண்டிருக்கும் இன்றைய காலத்திலும் பழமையும், நாட்டாரியல் பண்பும் இன்றும் செல்வச்சந்நிதி ஆலயத்தில் பேணப்படுவது அதன் பெருமைக்கும், தொன்மைக்கும் வலுச் சேர்க்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**சைகை மொழி பேசுவோரின் வாழ்வியல் தொடர்பிலும், அவர்களின் மொழியியலை ஏற்றுக்கொள்வது தொடர்பிலும் கடந்த வாரம் வெளியான கட்டுரையின் தொடர்ச்சியே இது...**



கட்டுரையாளர்கள்:
பேராசிரியர் திருமதி ச.சிவாணி,
கலாநிதி திருமதி ச.டிலோஜினி,
ம.சத்தியகுமார்,
திருமதி த.தசிகா,
கு.ஜெகாசினி,
ரா.சிறீரங்கநாயகி,
வி.திவாகர்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)


# புறக்கணிப்பற்ற சமூகம் உருவாக சைகைமொழியை அங்கீகரித்தல்!

சைகைமொழி பேசுவோரின் சமூகமானது தங்களுக்குரிய தனித்துவமான மொழியியலைக் கொண்டிருக்கின்றது. இந்தச் சைகை மொழியானது அவர்களது சமூக மற்றும் கலாசாரப் பண்புகள், தேவைகளின் அடிப்படையில் உருவானதாகும். இது தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் தமிழ் பேசுவது போன்றும், சிங்கள மக்கள் சிங்களத்தில் உரையாடுவதுபோன்றும் இவர்கள் தமது சைகை மொழியை தமது தாய்மொழி சார்ந்தே வெளிப்படுத்துகின்றனர். இது அவர்களுக்குப் பெரும் சவால்களை ஏற்படுத்துகின்றன.

உதாரணமாக ஒருவர் சிங்களத்தில் உரையாடும்போது ஒரு தமிழ்மொழியை அடிப்படையாகக் கொண்ட சைகைமொழி பேசுவோருக்கு இரண்டு 'வெளிப்பட்டாளர்கள்' தேவை. ஒருவர் சிங்கள மொழியை சிங்கள சைகைமொழியாக மாற்றுவதற்கு மற்றவர் சிங்கள சைகைமொழியை தமிழ் சைகை மொழியாக மாற்றி வெளிப்படுத்துவதற்காகும். இது அந்தச் சமூகத்தில் நிலவுகின்ற மிகவும் சிக்கலான மொழிச் சவாலை வெளிப்படுத்துகின்றது. பேச்சு மொழியை மொழிபெயர்த்து வெளிப்படுத்துவதற்கு மேலதிகமாக வெளிப்பாட்டாளர்களும் தேவைப்படுகின்றனர். இது பல்வேறு வெளிப்பாட்டாளர்கள் சைகை மொழி பேசும் மக்கள் மத்தியில் தேவைப்படுகின்றனர் என்பதை மிகவும் உறுதியாக வெளிப்படுத்துகின்றது.

ஆங்கில மொழியை அடிப்படையாகக்கொண்ட சைகை மொழியானது இவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. இதன் மூலம் சைகை மொழியில் பன்முகத்தன்மை புலப்படுத்துவதோடு சைகை மொழி என்பது தனியே ஒரு சைகை குறியீடாக மாத்திரமன்றி சைகை மொழி பேசுவோரின் கலாசாரம் மற்றும் அவர்களது மொழியாற்றல் திறன், மொழியின் விருத்தி என்பவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றது. ஒரு பல்கலைக்கழகத்தின் கல்வியாளர்களாக நாங்கள் சைகை மொழி வெளிப்பாட்டில் ஈடுபடும் மூன்று பெண்களைச் சந்தித்தோம். அவர்கள் தங்களது துயரமான சிறு வயது அனுபவத்தை எங்களோடு பகிர்ந்துகொண்டனர்.

'எங்களுடைய பெற்றோர் வாய் பேச முடியாதவர்கள். அத்துடன் அவர்களுக்கு காதும் கேட்காது. எங்களுடைய குழந்தைப் பருவத்தில் அவர்கள் எங்களுடன் கதைப்பதில்லை. அவர்களோடு எப்படியான தொடர்பாடலை மேற்கொள்ளவேண்டும் என்று எமக்குத் தெரியவில்லை. குழந்தையாக இருந்தபோதே எமது பெற்றோரின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய பொறுப்பு எம்மிடம் வந்தது. அரச மற்றும் தொண்டு நிறுவனங்கள் எமக்கான கல்வியை வழங்கின. எமது சிறுவயது அனுபவம் எம்மை வெளிப்பாட்டார்களாக மாற்றியது. முதலில் நாம் எமது பெற்றோருடன் தொடர்பாடலை மேற்கொள்வதற்காக இதில் பயிற்சி பெற்றோம். ஆனால் காலப்போக்கில் எமது பெற்றோரைப் போல பலர் இத்தகைய பிரச்சினைகளில் இருப்பதால் அவர்களுக்கும் உதவவேண்டும் என்னும் சமூக அக்கறையில் இப்போது நாம் பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம். இத்தகைய சேவையானது மிகவும் மனத்திருப்தியுடனும் மகிழ்ச்சிகரமான சேவையாக இருக்கிறது' என்றவாறாக அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.




## சைகைமொழி வெளிப்பாட்டாளர்கள் இலங்கையில் அதிகளவு தேவை

இலங்கையில் பேசப்படும் இரு தாய் மொழிகளில் அடிப்படைகளை சிறப்பாக விளங்கிக் கொண்டு அவற்றை சைகை மொழி பேசும் மக்களிடையே மொழிபெயர்த்து அதை சைகை மொழியாக வெளிப்படுத்தக்கூடிய வெளியீட்டாளர்களில் தேவை எமது நாட்டில் அதிகமாக உள்ளது. எமது சமூகத்தில் உள்ள எத்தனை பேர் இந்த மக்களுக்கு சேவையாற்றுவதற்காக வெளிப்பாட்டாளராகத் தமது தொழில்த்தகைமையை உருவாக்குவதற்கு தயாராக இருக்கின்றார்கள்? இலங்கையில் கல்வி தொடர்பான கொள்கை மாற்றங்களில் சைகை மொழிக் கல்விக்கான முக்கியத்துவம் உணரப்பட்டு வெளியீட்டாளர்கள் பலரை உருவாக்கி சைகை மொழி பேசும் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றக்கூடிய பொருத்தமான கல்விக் கொள்கை உருவாகவேண்டும்.

சைகை மொழி பேசும் பெண்கள் தமக்கான வாழ்வு மிகவும் மனவருத்தத்துக்கு உரியதென்பதையும் அசையும் அசையாச் சொத்துக்களுக்குக் காப்புறுதி செய்யும் கட்டாயம் இருக்கும் இன்றைய நிலையில் தமது வாழ்வுக்கான அடிப்படை மொழி உரிமைகூட இன்றி ஆபத்து நிறைந்த ஒரு சமூகத்தில் துஸ்பிரயோகங்கள் மற்றும் துயரங்களை வெளிப்படுத்த முடியாத ஒரு துரதிஷ்டமான பிறவியைத் தாங்கள் எடுத்துவிட்டோமோ என தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். இவர்கள் நாளாந்தம் தமக்கான பொதுச்சேவைகளை பெற்றுக்கொள்வதில் மிகவும் சிரமப்படுகின்றனர். மருத்துவ சேவை, சட்டச் சேவை, பாதுகாப்புச் சேவை, வங்கிச் சேவை மற்றும் போக்குவரத்து சேவை போன்ற அத்தியாவசிய சேவைகளை பெற்றுக் கொள்ளும்போது சேவை வழங்குநர்கள் இவர்களுடைய மொழியை விளங்கிக்கொள்ளமுடியாமல் வெளிப்பாட்டாளர்களை அழைத்து வருமாறு நிர்ப்பந்திக்கும்போது வெளிப்பாட்டாளர்களின் தட்டுப்பாடு இவர்களுக்கான அடிப்படைச் சேவைகளைப்பெற்றுக்கொள்வதில் தடைகளையும் தாமதத்தையும் ஏற்படுத்துகின்றது.

(தொடரும்)



இலங்கைத் திருநாட்டின்
சிகரட் புகைஞர்களின்
பாவனையினால்
தினமும்
ஐநூற்று இருபது
மில்லியன் ரூபா
புகையாகிறது
பணம் புகையாவதோடு


அவர்தம் உடலும்
அவர் குடும்பமும்
சுற்றுப்புறச்
சூழலும்
பாதிப்புறுவதை
அறிவார்களா
தெளிவார்களா
சிகரட் புகைஞர்கள்

## புகையாகும் பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்காக்கும் உதிரக்கொடை

த.றவினதாஸ்
பொதுச்சுகாதாரப் பரிசோதகர்
பிராந்திய இரத்த வங்கி
யாழ். போதனா மருத்துவமனை




உலக சுகாதார ஸ்தாபனம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 14ஆம் திகதியை உலக குருதிக்கொடையாளர் தினமாக கடைப் பிடிக்கின்றது. ஏ. பி. ஓ குருதிவகையைக் கண்டுபிடித்து நோபல் பரிசில் பெற்றவரான கார்ல் லாண்ட்ஸ்டெய்னெரின் பிறந்த நாளை முன்னிட்டே இந்தத் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப்பொருளில் இந்தத்தினம் கொண்டாடப்பட்டுவருகின்ற நிலையில், இந்த வருடத்துக்கான தொனிப்பொருளாக 'உதிரம் கொடுப்போம், நம்பிக்கை கொடுப்போம், உயிர்காக்க நாம் ஒன்றிணைவோம்' என்பது அமைந்துள்ளது. இந்தத் தினத்தில் தொடர்ச்சியாக குருதிக்கொடை வழங்கி உயிர்காக்கும் உன்னத பணியை மேற்கொண்டு வருவோர் கௌரவிக்கப்பட்டுவருகின்றனர். இலங்கையிலும் இந்த நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, வடமாகாண பிராந்திய இரத்த வங்கிகளான யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கியிலும் தெல்லிப்பழை, பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் சாவகச்சேரி இரத்த வங்கிகளிலும் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்த குருதிக் கொடையாளர்களையும், இரத்ததான முகாம் ஒழுங்கமைப்பாளர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இருதய சத்திர சிகிச்சை, சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை மற்றும் நரம்பியல் சத்திர சிகிச்சை போன்ற பல சத்திரசிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் குருதியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. ஆகவே எதிர்காலத்தில் குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவேண்டும். அப்போதுதான் வடமாகாணத்தில் சிறந்த குருதிமாற்று பிரயோக சேவையை மேற்கொள்ள முடியும். குருதிக்கொடை தொடர்பில் பல்வேறு முரணான கருத்துகள், போலியான தகவல்கள் தொடர்ச்சியாகப் பரப்பப்பட்டுவருகின்றன. எனவே, இந்தப் பிறழ்வான கருத்துகளைப் புறமொதுக்கி குருதிக்கொடை வழங்குவதற்கு இளைஞர்களும், யுவதிகளும் முன்வரவேண்டும்.



## காகத்தின் புலம்பல்

அதிகாலை வேளை
ஜில் என்ற காற்று
கொட்டும் பனி......!
பனையோலையாலும்
பனி சொட்டுச் சொட்டாக
விழுகிறதே....!
இரைதேடப்போவது
எப்படி.......!
இது காகத்தின் புலம்பல்

செல்லம்மாப் பாட்டியின்
வீட்டுக்குத்தான்
போகவேண்டும்.....!
சாப்பாடு போடுவா......
குஞ்சுகளே கூட்டுக்குள்
பத்திரமாக இருங்கள்!
அம்மா உடனே வந்திடுவேன்!

என்னப்பா...... இது!
செல்லம்மா பாட்டி வீடு
பூட்டி இருக்கிறதே.....!
இன்னும் எழவில்லையோ?
கா!..... கா!..... கா!....
குரல் கொடுத்தேன்!
நாய்தான் ஓடிவந்தது!

நல்லம்மா பாட்டியின்
வீட்டுப்பக்கம் பறந்தேன்!
மாமரத்தில் பழம் இருந்தால்
ஏதாவது கிடைக்கும்!
கா!..... கா!..... கா!....
சின்னப் பாப்பா ஓடிவாறாள்!
கையிலே பணீஸ்......
எப்படியும் பறிக்கவேண்டும்!
திட்டம் தீட்டினேன்!

கா!..... கா!..... கா!....
என் குரல்.....
சின்னப்பாப்பா தன் குரலில்
சூ!..... சூ!..... சூ!....
என்ன இது நாய் வருகிறதே!
ஏமலாந்தும் வேளையிலே
பணீசைப் பறித்துவிட்டேன்!

உயரப் பறந்தேன்!
கூடு தேடி வந்தேன்!
குஞ்சுகள் வாயைத் திறந்தன!
ஊட்டி மகிழ்ந்தேன்!
பெற்ற தாயாக நிம்மதி
அடைந்தேன்!

சூரியன் சுட்டெரிக்கும் வேளை
மீண்டும் பறந்தேன்!
செல்லம்மாப் பாட்டி வீட்டுப் பக்கம்
பறந்தேன்.......!
ஒரே சனக் கூட்டம்!
என் இனத்தவர்கூட
மரங்களில்......
எட்டிப்பார்த்தேன்.....!
பாவம் பாட்டி
இறந்துவிட்டாளாம்!
நிதமும் உணவு தரும்
பாட்டிக்கு நானும்
கா! கா! கா! என்று கரைந்து
அஞ்சலி செலுத்தினேன்!

என் இனத்தவரின் கூட்டமும்
பெருகியது......
கா!..... கா!..... கா!.... என்று
கரைந்தபடியே செல்லம்மாப்
பாட்டியின் இறுதியாத்திரையில்
வானில் பறந்துசென்றோம்!

திருமதி தவமணிதேவி
கணேசலிங்கம்
மூதாளர் அன்பு இல்லம்
சிவபுர வளாகம்
ஏ9 வீதி முகமாலை



புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்
- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்

## சபை நிதி 2025 ( கட்டம் 5), முத்திரைத் தீர்வை நிதி, மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. வலிகாமம் தெற்கு பிரதேச சபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே **6 ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017, தொலைநகல் 021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2025.06.18 – 2025.07.01 காலப் பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3,500.00** மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2025.07.02 திகதி 10.30 மணிக்கு முன்னர் **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு 2025.06.24 அன்று நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை வரி நீங்கலாக (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| **சபை நிதி** | | | | | | | | | |
| 01. | NP/14/41(15)/02/05/CF/ 2025/27 | பாணப்பாய் வீதி அமைத்தல், தாவடி தெற்கு | 2.54 | 60 | C9 or above (வீதிகள்) | 49 | 19.08.2025 | 26,000.00 | 16.09.2025 வரை |
| 02. | NP/14/41(15)/02/05/CF/ 2025/28 | சங்குவேலி பிள்ளையார் கோவில் வீதி புனரமைத்தல் | 2.97 | 60 | C9 or above (வீதிகள்) | 49 | 19.08.2025 | 30,000.00 | 16.09.2025 வரை |
| 03. | NP/14/41(15)/02/05/CF/ 2025/29 | 1. பழனி ஆண்டவர் கோவில் வீதி புனரமைத்தல், சுன்னாகம் மேற்கு. 2. புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம் மேற்கு. | 3.00 | 60 | C9 or above (வீதிகள்) | 49 | 19.08.2025 | 30,500.00 | 16.09.2025 வரை |
| 04. | NP/14/41(15)/02/05/CF-D/ 2025/30 | தர்மலிங்கம் வீதி புனரமைத்தல், இணுவில் மேற்கு – கட்டம் 1-B (காபெட் வீதி) | 4.83 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 19.08.2025 | 48,500.00 | 16.09.2025 வரை |
| 05. | NP/14/41(15)/02/05/CF-D/ 2025/31 | தொகுதி 1 1. கலாஜோதி கலையரங்க முன்பக்க வீதிபுனரமைத்தல், இணுவில் வட கிழக்கு 2. விளாத்தியடி உப வீதி புனரமைத்தல், சுன்னாகம் தெற்கு | 2.68 | 60 | C9 or above (வீதிகள்) | 49 | 19.08.2025 | 27,000.00 | 16.09.2025 வரை |
| 06. | NP/14/41(15)/02/05/CF-D/ 2025/32 | தொகுதி 2 1. பூதவராயர்கோவில் வீதி உப ஒழுங்கை (செல்லப்பா மணியகாரன் இணைப்பு வீதி 2. புத்தூர் வீதி மூன்றாம் சந்திக்கும், ஈவினைக்கும் இடைப்பட்ட வீதி | 2.69 | 60 | C9 or above (வீதிகள்) | 49 | 19.08.2025 | 27,000.00 | 16.09.2025 வரை |
| 07. | NP/14/41(15)/02/05/CF-D/ 2025/33 | பூவிலடி வீதி புனரமைத்தல், ஈவினை- கட்டம் 1 | 3.20 | 60 | C9 or above (வீதிகள்) | 49 | 19.08.2025 | 32,500.00 | 16.09.2025 வரை |
| 08. | NP/14/41(15)/02/05/CF-D/ 2025/34 | தொகுதி 3 1. ஜி.ஜி பொன்னம்பலம் வீதி உப ஒழுங்கை 2. மீனாட்சி அம்பாள் கோவிலடி தோட்டப் பாதை அமைத்தல், ஈவினை | 2.09 | 60 | C9 or above (வீதிகள்) | 49 | 19.08.2025 | 21,000.00 | 16.09.2025 வரை |
| 09. | NP/14/41(15)/02/05/CF-D/ 2025/35 | தொகுதி 4 1. கொத்தியவத்தை அம்பனை வீதி புனரமைத்தல், சுன்னாகம் மேற்கு (கொங்கிறீட்) 2. குமாரசாமி புலவர் வீதியிலுள்ள பொலிஸ்நிலையத்திற்கு முன் வீதி புனரமைத்தல், சுன்னாகம் தெற்கு | 4.30 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 19.08.2025 | 43,500.00 | 16.09.2025 வரை |
| **முத்திரை தீர்வை நிதி** | | | | | | | | | |
| 10. | NP/14/41(15)/02/05/Stamp Duty/ 2025/01 | சோமாரந் தோட்டம் வீதி புனரமைத்தல், உடுவில் வடக்கு | 3.81 | 60 | C9 or above (வீதிகள்) | 49 | 19.08.2025 | 38,500.00 | 16.09.2025 வரை |
| **மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை** | | | | | | | | | |
| 11. | NP/14/41(15)/02/05/PSDG/ 2025/01 | சுன்னாகம் பஸ் நிலையத்திற்கான அபிவிருத்தி வேலைகள் | 0.54 | 30 | C9 or above (கட்டடம்) | 49 | 19.08.2025 | 5500.00 | 16.09.2025 வரை |

**தலைவர்**
**பிரதேச பெறுகைக்குழு,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**
**2025.06.18**

# நெலுவ பிரதேசசபை ஐ.ம.சக்தி வசமானது

கொழும்பு, ஜூன் 18

நெலுவப் பிரதேசசபையின் ஆட்சியை ஐக்கிய மக்கள்சக்திதலைமையிலான எதிர்க்கட்சி நேற்றுக் கைப்பற்றியுள்ளது. அதன்படி, காலி மாவட்டத்தில் நெலுவப் பிரதேசசபையின் தவிசாளராக, பெரும்பான்மை வாக்குகளைப்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அஜித் சந்தன தேர்ந்தெடுக்கப்பட்டார். (ச-இ)

## காங்கேசன்...

கொரோனாக் காலத்தின்போதும், அதற்குப் பின்னரான பொருளாதார நெருக்கடிகளின்போதும் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான எரிபொருள் வழங்கலில் நீண்ட தாமதங்கள் ஏற்பட்டிருந்தன. இந்த விடயம் தொடர்பில் பல்வேறு தரப்பினருக்கும் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்தே, அந்தப் பிரச்சினையை நிவர்த்திசெய்ய தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரியொருவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்சேன்துறையிலுள்ள எரிபொருள் விநியோக களஞ்சியசாலையின் திருத்தப் பணிகள் யாவும் நிறைவுபெற்றுள்ளன. இதையடுத்து, குறித்த களஞ்சியசாலையிலிருந்து எரிபொருள்கள் பரீட்சார்த்தமாக யாழ். மாவட்ட எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக் கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இனிவரும் நாள்களில் இந்த நடைமுறையே பின்பற்றப்படும் - என்றார்.

காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சிய சாலையின் புனரமைப்புக் காரணமாக, இவ்வளவு காலமும் அநுராதபுரத்திலிருந்தே யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள்கள் எடுத்துவரப்பட்டன. இதனால் எரிபொருள் விநியோகத்துக்கான கோரிக்கை கிடைத்தும் சில நாள்களின் பின்னரே எரிபொருள் வந்துசேர்ந்தது. இதனாலேயே, கடந்தகாலங்களில் தாமங்கள் ஏற்பட்டிருந்தன. இனி உடனுக்குடன் எரிபொருள் விநியோகிக்கப்பட வுள்ளதால் விநியோகத் தாமதத்தால் எரிபொருள் வரிசைகள் ஏற்படாது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-17)

## ஈ.பி.டி.பி.யுடன்...

வருக்கு இன்று கடிதம் மூலம் தெரியப்படுத்தவுள்ளது என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஊர்காவற்றுறைத் தொகுதிக் கிளைத் தலைவர் மா.இளம்பிறையன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வேலணையில் அமைந்துள்ள ஊர்காவற்றுறை தொகுதிக் கிளை காரியாலயத்தில் தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்றுறை நிர்வாகிகள், தொகுதிக்கிளை நிர்வாகிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான உறுப்பினர்கள் நேற்றுக் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர். இதன்போதே, ஈ.பி.டி.பி.யின் ஆதரவு பெற்றும் அல்லது ஈ.பி.டி.பி.க்கு ஆதரவு வழங்கியும் ஆட்சியமைப்பதில்லை என்று அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவருக்கு கடிதமொன்றையும் நாளை(இன்று) வழங்கவுள்ளோம்.

வழங்கவுள்ள கடிதத்தின் சாராம்சமாவது:-

75 வருடங்களாகத் தமிழ்த் தேசியத்துக்காகச் செயற்படும் தமிழரசுக் கட்சி, கடந்த 35 வருடங்களாக தமிழ்த் தேசியத்துக்கு எதிரான செயற்பாடுகளைப் புரியும் ஈ.பி.டி.பி.யுடன் இணைந்து ஆட்சியமைப்பது கொள்கை ரீதியான தவறு.

அத்துடன், தீவகத்தில் கடந்தகாலங்களில் ஈ.பி.டி.பி. முன்னெடுத்த அராஜகமான ஆட்சியை வெறுத்தமையால்தான் இம்முறை மக்கள் தமிழரசுக்கு ஆணை வழங்கியுள்ளனர். இவ்வாறிருக்கையில், ஈ.பி.டி.பி.யுடன் இணைந்து ஆட்சிய மைத்தால் அது மக்களின் ஆணையை கேவலப்படுத்தும் செயற்பாடாகவே அமையும்.

2001ஆம் ஆண்டு தீவகத்தில் தேர்தல் பரப்புரைக்காகச் சென்ற தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் ஈ.பி.டி.பி.யின் காடையர்களால் தாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் உள்ளனர். இது நீதிமன்றத் தீர்ப்பு கள்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான நிலையில், ஈ.பி.டி.பி.யுடன் இணைந்து செயற்படுவது தமிழரசின் நன்மதிப்பைக் குலைப்பதுடன் எதிர்காலத்தில் மீண்டெழமுடியாத பின்னடைவைக் கட்சிக்குக் கொடுக்கும் என்றவாறாக அமைந்துள்ளது - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வலி.கிழக்குப்...

அமர்வு நடைபெறவுள்ளது. 36 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 11 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 9 ஆசனங்களும், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 5 ஆசனங்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 5 ஆசனங்களும், தமிழ் மக்கள் கூட்டணிக்கு 2 ஆசனங்களும், சுயேச்சைக்குழு ஒன்றிற்கு 2 ஆசனங்களும், சுயேச்சைக்குழு இரண்டிற்கு ஓர் ஆசனமும், ஈ.பி.டி.பிக்கு ஓர் ஆசனமும் கிடைத்துள்ளன.
தமிழரசுக் கட்சிக்கு தமிழ் மக்கள் கூட்டணியும், ஈ.பி.டி.பி.யும் ஆதரவு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்குவதில்லை என்பது பேரவையினதும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினதும் கொள்கையாகவுள்ளதால் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்க வாய்ப்புகள் காணப்படுகின்றன. (அ-ம-26)

## வல்வெட்டித்...

வல்வெட்டித்துறை நகரசபையின் முதலாவது அமர்வு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் இன்று காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளது. 16 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில் தமிழ்த் தேசியப் பேரவை 7 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி 5 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி. ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளன. தேசிய மக்கள் சக்தி நடுநிலை வகிக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளதால், தமிழ்த் தேசியப் பேரவை இந்தச் சபையில் இலகுவாக ஆட்சியமைக்கும் என்று கருதப்படுகின்றது. (அ-ம-26)

## கரவெட்டியில்...

அமைத்தபோதிலும், அந்தத் தரப்பின் உறுப்பினர் ஒருவர் எதிரணிக்கு வாக்களித்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.
தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்க ஈ.பி.டி.பி. ஆதரவு வழங்கியது. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 13 ஆசனங்களும் ஈ.பி.டி.பி.க்கு 2 ஆசனங்களும் உள்ளதால் 15 ஆசனங்களைப் பெறக்கூடிய நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி காணப்பட்டது. எனினும், இரகசிய வாக்கெடுப்பைப் புறக்கணித்து ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் வெளிநடப்புச் செய்ததால், தமிழரசுக் கட்சி 14 வாக்குகளையேனும் பெற்றிருக்கவேண்டும். ஆனால் 13 வாக்குகளே கிடைத்தன. எனவே, தமிழரசுக் கட்சி ஈ.பி.டி.பி. கூட்டணியில் ஒருவர் இரகசிய வாக்கெடுப்பின்போது எதிரணிக்கு வாக்களித்துள்ளார் என்று தெரியவந்துள்ளது. (அ-ம-26)

## வலி.வடக்கும்...

கள் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் அமர்வு இன்று நண்பகல் 2.30 மணியளவில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் பிரசன்னத்தில் இடம்பெறவுள்ளது. 35 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில், தமிழரசுக் கட்சி 11 ஆசனங்களையும் தமிழ்த் தேசியப் பேரவை 6 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 9 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 3 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி. 3 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 2 ஆசனங்களையும், தமிழ் மக்கள் கூட்டணி ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளன. தேசிய மக்கள் சக்திக்கு தமிழ்த் தேசியப் பேரவையும், தமிழ்த் தேசியப் பேரவைக்கு தேசிய மக்கள் சக்தியும் ஆதரவு வழங்குவதில்லை என்பது கொள்கை ரீதியான தீர்மானங்கள் என்பதால் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைப்பது உறுதி என்றே கருதப்படுகின்றது. (அ-ம-26)

## உணவருந்திய...

ளார். கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த கேதீஸ்வரன் எனோக் ஹசான் (வயது-20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
உணவருந்திய பின்னர் மயக்கமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## இரத்த...

நெடுந்தீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த இராமநாதன் முத்துலிங்கம் (வயது-62) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
கடந்த 15ஆம் திகதி இரவு படுக்கையில் இரத்தவாந்தி எடுத்த அவர், மறுநாள் காலையில் நெடுந்தீவு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே, சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## எரிபொருள்...

என்று பரப்பப்பட்ட போலித் தகவல்கள் காரணமாக யாழ்ப்பாணத்தில் உள்ள பல எரிபொருள் நிரப்புநிலையங்களில் நேற்றுமுன்தினம் இரவிரவாக நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருந்து எரிபொருளை நிரப்பத் தொடங்கினார்கள்.
இந்த நிலை நேற்றும் தொடர்ந்தது.
நேற்று யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல் வவுனியா, கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்களிலும் எரிபொருள் வரிசைகளை அவதானிக்கமுடிந்தது. (அ-ம-17)

## ரயிலில்...

ளார். நேற்று மாலை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-26-22)

## செம்மணிப்...

பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.
இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
இலங்கையில் இனமுரண்பாடு தோன்றியபின்னர் சிறுபான்மையின மக்கள் பல வழிகளிலும் பாதிப்புகளை எதிர்கொண்டனர். அவ்வப்போது திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட இனக்கலவரங்களால் சிறுபான்மையினத்தவர் குறிப்பாகத் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் அநியாயமாகக் கொல்லப்பட்டதுடன் பெறுமதிமிக்கசொத்துக்களும்சூறையாடப்பட்டன.
இனமுரண்பாடு என்பது உருமாற்றம் பெற்று ஆயுதப் பிணக்காக மாற்றமுற்ற போது பல்வேறு வழிகளிலும் தமிழ்மக்கள் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன. படுகொலைகள், சந்தேகத்தின் பெயரிலான கைதுகள், காலவரையறையற்ற தடுப்புகள், விசாரணையற்று அல்லது விசாரணை முடிவுறுத்தப்படாது திட்டமிட்டு இழுத்தடிப்புச் செய்யப்பட்ட சிறைவாசம், காணாமலாக்கப்படுதல் என்றவாறான அடக்குமுறைகளின் வடிவங்கள் நீண்ட பட்டியலைக்கொண்டன.
தமிழர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட அடக்குமுறைகளில் அதிகம் கவனம் கொடுக்கப்படும் விடயங்களாக இன்று வரையும் இருப்பவை சட்டத்தின் பிடியால் இறுக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் தடுத்துவைப்பும் காணமால் போனவர்கள் குறித்த நிச்சயமற்ற தன்மையுமே. இவற்றுள்ளும் அதிக வலியையும் வேதனையையும் தருபவை காணாமலாக்கப்பட்டவர்களின் கதைகளே. இவ்வாறானதொரு விடயப்பரப்பாக செம்மணிப் புதைகுழி விவகாரமும் விளங்குகின்றது. ஆயினும் தொடர்ந்தும் கைவிடப்படும் விடயமாக இனியும் இது மாறிவிடக்கூடாது எனும் அக்கறையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினராகிய நாம் வலுவாகப் பதிவுசெய்கின்றோம்.
இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணக் குடாநாடு இருந்தபோது காணமால் ஆக்கப்பட்ட பலருக்கு இன்றுவரை என்ன நடந்தது என்பது தெரியாத அவலநிலை தொடர்கின்றது. இந்த நிலையே இறுதிப் போரின் போதும் நிகழ்ந்துள்ளது. அவர்களது உறவினர்கள் பல்லாண்டுகளாக தொடர்ச்சியாக போராடிவருகின்றார்கள்.
போருக்குப் பின்னரான சூழ்நிலையில் யார் எந்த வலுவான சக்தியும் இயற்கை நீதிக்கு மாறாக நிகழ்ந்த அவலங்களை மறைக்க நினைத்தாலும் அவை ஏதோவொரு விதத்தில் வெளிக்கிளம்பிய வண்ணமேயுள்ளன. செம்மணிப் புதைகுழி விவகாரமும் இப்போது அவ்வாறு வெளிக்கிளம்பி நீதித்துறையின் கட்டுப்பாட்டில் உரியவகையில் முன்கொண்டு செல்லப்படுகின்றது. இந்த நிலை வலுவாக்கப்படவேண்டும் என்பதுடன் புதைகுழிகளின் நீட்சி அறியப்படவும் வேண்டும் என்பதும் மிகவும் அவசியமானது.
எந்தவொரு காரணத்தை முன்னிறுத்தியும் புதைகுழி அகழ்வுகள் இடைநிறுத்தப்படக்கூடாது. உரிய நிதியை உரிய காலத்தில் விடுவித்தல், புதைகுழி அகழ்வுப் பிரதேசங்களுக்கு உரிய பொலிஸ் பாதுகாப்பினை வழங்குதல், அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் தரப்பினர் மீது அழுத்தங்களைப்பிரயோகிக்காதிருத்தல் என்பன அவசியமானவையென எமது ஆசிரியர் சங்கம் கருதுகின்றது. இவ்விடயங்களில் எந்தவித நெகிழ்வுமற்று செயற்படவேண்டிய பொறுப்பு ஆட்சியிலுள்ள அரசாங்கத்துக்குரியது - என்றுள்ளது. (அ-ம-இ)

## கடைசிவரை...

நடத்தப்பட்ட நிலையில், நீண்ட பரபரப்பின் பின்னர் தமிழரசுக் கட்சி ஆட்சியமைத்துள்ளது. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் முதலாவது அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. 32 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 13 ஆசனங்களும், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 7 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 6 ஆசனங்களும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 4 ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு 2 ஆசனங்களும் கிடைத்திருந்தன.
தவிசாளரைத் தெரிவுசெய்வதற்கு பகிரங்க வாக்கெடுப்பை நடத்துவதா? அல்லது இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதா? என்று கோரப்பட்டபோது, இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன பகிரங்க வாக்கெடுப்பையும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி ஆகியன இரகசிய வாக்கெடுப்பையும் கோரின. இதன்படி இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
தேசிய மக்கள் சக்தி வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. ஈ.பி.டி.பி.யின் உறுப்பினர் ஒருவர் இரகசிய வாக்கெடுப்புக்கு எதிராக வெளிநடப்புச் செய்வதாக அறிவித்தார். இதனால், 32 உறுப்பினர்களில் 25 உறுப்பினர்களே வாக்களிப்பில் பங்கேற்றனர்.
இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட குமாரசாமி சுரேந்திரன் 13 வாக்குகளையும், தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் போட்டியிட்ட தம்பையா சிவராசா 12 வாக்குகளையும் பெற்றனர். ஒரு வாக்கு வித்தியாசத்தில் குமாரசாமி சுரேந்திரன் வெற்றிபெற்றார். இதனால், தமிழரசுக் கட்சி அந்தச் சபையில் ஆட்சியமைத்தது.
உபதவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தியாகராசா தயாபரன் தெரிவானார். (அ-ம-26)

## கொள்கைக்கு...

நடுநிலை வகிப்பது என்ற கொள்கைக்கு மாறாக தேசிய மக்கள் சக்தி செயற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
தவிசாளர் தெரிவை இரகசியமான வாக்கெடுப்பில் நடத்துவதா? அல்லது பகிரங்க வாக்கெடுப்பில் நடத்துவதா? என்று உள்ளூராட்சி ஆணையாளர் கேட்டபோது, தேசிய மக்கள் சக்தியினர் ஏனைய சபைகளில் செயற்பட்டதைப் போன்று நடுநிலை வகிக்கவில்லை. மாறாக, சைக்கிள் - சங்குக் கூட்டணியுடனும் இணைந்து இரகசிய வாக்கெடுப்பைக் கோரியது. இதையடுத்தே, அந்தக் கட்சி கரவெட்டி பிரதேசசபையில் நடுநிலையுடன் செயற்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம-26)

## பரு.பிரதேச...

மணிக்கு இடம்பெற்றது. 20 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 9 ஆசனங்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 4 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 4 ஆசனங்களும், சுயேச்சைகளுக்கு இரண்டு ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு ஓர் ஆசனமும் கிடைத்திருந்தன. தவிசாளர் தெரிவுக்காக தமிழரசுக் கட்சியின் சார்பில் உதயகுமார் யுகதீஸ் முன்மொழியப்பட்டார். அவர் ஏகமனதாகத் தெரிவானார். உபதவிசாளராக தமிழரசுக் கட்சியின் கனகரத்தினம் சிறிகாந்த் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (அ-ம-26-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முறையற்ற அரச நிர்வாகத்தால் கட்டமைப்பு பலவீனமாகும் நிலை

## இந்திக அநுருத்த தெரிவிப்பு

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அதிகாரம் முறைகேடான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக நீதியமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோரை விசாரணைக்குட்படுத்தவேண்டும் - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இந்திக அநுருத்த தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகத்தால் முழு அரச நிர்வாகக் கட்டமைப்பும் பலவீனமடையும் நிலை காணப்படுகின்றது. அரசாங்க சேவையின் உயர் அதிகாரிகளைக் கைதுசெய்து அவர்களை விசாரணைக்குட்படுத்தும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் சந்தேகத்தின் அடிப்படையில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கைதுசெய்யப்பட்டுள்ளார். அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு பொறுப்பேற்கும்நிலையில் ஜனாதிபதியோ அல்லது அரசாங்கத்தின் உயர் பிரமுகர்களோ இல்லை. சிறைச்சாலை தலைமையகத்தின்மீது மாத்திரமே குற்றஞ்சாட்டப்படுகிறது. நீதியமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகம் குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை-என்றார். (எ- இ)

**வேலையாட்கள் தேவை**

எமது கால்நடை உற்பத்தி விற்பனைக்கு ஆண் (Light Vehicle Licence, Auto, Mc உட்பட) உள்ள வேலையாள் தேவை.

EGG CENTER
077 851 1265, 075 258 9665

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

**கடை வாடகைக்கு**

குளப்பிட்டி சந்திக்கு அருகாமையில் கடை (1st Floor) வாடகைக்கு உண்டு.

077 704 1582, 077 506 0749

**பண வசூலிப்பாளர் தேவை**



யாழ். நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு

**பண வசூலிப்பாளர் தேவை.**

தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரிக்கு 18.06.2025 புதன்கிழமை மு.ப 9.00 - பி.ப 02.00 வரை நேரில் சமுகம் தரவும்.

உதயன்

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

பயிற்சியுடன்
**வேலைவாய்ப்பு**
செய்தியாளர்கள்




துடிப்பும், திறமையும் சமூகப்பற்றும் கொண்டவரா நீங்கள்?

ஆம் எனில் இது உங்களுக்கான சந்தர்ப்பம்!!

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி
chiefeditor@uthayan.com



# சகவாழ்வைக் கட்டியெழுப்ப சிநேகபூர்வமான சந்திப்பு

மன்னார், ஜூன் 18

இனங்களுக்கு இடையே சகவாழ்வைக் கட்டியெழுப்பும் செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்டமாக இந்துமதத் தலைவரைச் சந்திக்கும் நிகழ்வு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மன்னார் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷேஹ் அஸீம் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்துகுருமார் ஒன்றியத் தலைவர் மகா தர்மகுமாரக் குருக்கள், திருக்கேதீஸ்வர ஆலயப் பிரதமகுரு கருணானந்த குருக்கள், திருக்கேதீஸ்வர ஆலயத் தலைவர் பொறியியலாளர் இர்ாமகிருஸ்ணன் ஆகியோர்களுக்கும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மன்னார் நகரக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களுக்குமிடையில் சிநேகபூர்வச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. மன்னார் நகரத்துக்குள் இன நல்லுறவை மேம்படுத்தல் சம்பந்தமான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவால் வெளியிடப்பட்ட நூற்றாண்டு நினைவுமலரும் கையளிக்கப்பட்டுள்ளது. (எ-60)

# யாழ்.மாநகரசபை முதல்வர் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18



யாழ்.மாநகரசபையின் புதிய முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட திருமதி மதிவதானி விவேகானந்தராஜா வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் சம்பிரதாயபூர்வமாக சந்தித்துக் கலந்துரையாடினார். யாழ். மாநகரசபையின் பல்வேறு தேவைகள் தொடர்பாக அவர் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கைகள் முன்வைத்தார்.

அத்துடன் யாழ்ப்பாண நகர அபிவிருத்தி தொடர்பாக எதிர்காலத்தில் இணைந்து பணியாற்றவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் கேட்டுக்கொண்டார். (ச-22,66)

## பருத்தித்துறை...

நடைபெற்ற நிலையில், அங்கு தமிழ்த் தேசியப்பேரவை ஆட்சியமைத்துள்ளது.

15 ஆசனங்களை கொண்ட பருத்தித்துறை நகரசபைக்கான தேர்தலில், தமிழ்த் தேசியப் பேரவை 5 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி 4 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 2 ஆசனங்களையும், சுயேச்சைக்குழு (ஊசி) 1 ஆசனத்தையும், ஈ.பி.டி.பி. 1 ஆசனத்தையும் பெற்றிருந்தன.

வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பிலும், திரு ஞானசம்பந்தர் சந்திரசேகரன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பிலும் தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்டனர். பகிரங்க வாக்கெடுப்பாக இந்த வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் வின்சன் டீ போல் டக்ளஸ் போல் 7:4 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றார்.

வாக்கெடுப்பின் ஆரம்பத்தில் ஈ.பி.டி.பி. யின் உறுப்பினர் வெளிநடப்புச் செய்தார். தேசிய மக்கள் சக்தியின் இரண்டு உறுப்பினர்களும், சுயேச்சைக்குழு (ஊசி) உறுப்பினருமாக மூவர் நடுநிலை வகித்தனர்.

தொடர்ந்து பிரதித் தவிசாளருக்கான வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளரான தேவசிகாமணி தேவராஜேந்திரன் 7:4 என்ற அடிப்படையில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் ந.நிரஞ்சனைத் தோற்கடித்தார்.

(அ-ம-100-26)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.06. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.